වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

ANNUAL REPORT

2022

මානව සම්පත් සංවර්ධනය කිරීමේ ශ්‍රී ලංකා ජාතික සභාව

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபை

National Human Resources Development Council of Sri Lanka

රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபை

வருடாந்த அறிக்கை

2022

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

354/2, நிபுணதா பியச, 7ம் மாடி, எல்விட்டிகெல மாவத்தை, கொழும்பு 05.

நிறுவனத்தின் பின்புலம்

நிறுவனம் : இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை

அமைச்சு : பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

முகவரி : 354/2, 7வது மாடி, நிபுணதா பியச, எல்விடிகல மாவத்தை, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05

மின்னஞ்சல் முகவரி : director.nhrdc@gmail.com

இணையத்தள முகவரி : www.nhrdc.gov.lk

தொலைபேசி : 0112595680

பக்ஸ் : 0112595680

கணக்காய்வாளர : கணக்காய்வாளர் நாயகம்
தேசிய கணக்காய்வு அலுவலகம்

வங்கியாளர்கள் : இலங்கை வங்கி
மக்கள் வங்கி

தொலைநோக்கு

துாரநோக்கு எங்களது எதிர்கால தொழில்படை தயார்

நோக்கம்

அபிவிருத்தி, அமுல்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் பயனுள்ள கொள்கைகளை நெறிப்படுத்துவதோடு புதுமையான உத்திகளைக் கையாண்டு எமது நாட்டின் மனிதவளத்தினை அபிவிருத்தி செய்தலாகும்.

பெறுமதிகள்

குழுக்கலாசாரம்

வாடிக்கையாளர் முக்கியத்துவம்

படைப்பாற்றல்

பாகுபாடு காட்டாமை

பொருளடக்கம்

1. நிறுவன பின்னணி மற்றும் நோக்கம் 1

2. மனிதவள அபிவிருத்தி சபையின் நிறுவனக் கட்டமைப்பு 4

3. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை – நிறுவன கட்டமைப்பு 8

4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் ஆளணி மற்றும் அவர்களது பதவிகள் 9

5. 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள் 13

5.1 2020/21 பட்டதாரி திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களின் வினைத்திறனான பயன்பாடு மீதான கற்கை (கொழும்பு மாவட்டத்திற்கான விசேட உசாவலுடன்) 13

5.2 முன்னுரிமை துறைகளுடன் தொடர்புடைய மனிதவள அபிவிருத்திக் கொள்கையின் வளர்ச்சிக்கான உத்திகளைக் கண்டறிதல்: 17

5.2.1 20 கைத்தொழில்துறையினருடன் கூட்டம் நடாத்தப்பட்டது 17

5.2.2 நிர்மாணிப்புத்துறையில் மனிதவளத்தை மேம்படுத்துவதற்கான உத்திகளை அடையாளம் காணல் 19

5.3 பொதுத்துறையின் பதவியணிச் செயல்முறையப் மீளாய்வு செய்தல் 22

5.4 ரக்கியா அருண நிகழ்ச்சித்திட்டம் - 2022 23

5.5 தேசிய மற்றும் துணை தேசிய மட்டங்களின் மனிதவள அபிவிருத்தி நிலையை அளவிடுவதற்கான ஒரு பயனுள்ள வழிமுறை 27

5.6 தேசிய மனிதவள அபிவிருத்திக் கொள்கையை உருவாக்கல் (NHRDP) 30

ஒவ்வொரு தூணிலு குறுக்குவெட்டுப் பகுதிகள் பரிந்துரைக்கப்படுகின்றன. 30

5.7 தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் புள்ளிவிபர சஞ்சிகை 33

6. தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் 2022 ஆண்டின் வெளியீடுகள் 33

7. 31 டிசம்பர் 2022ஆம் திகதியன்று நிதியியல் நிலைமைக்கூற்று 34

8. 31 டிசம்பர் 2022இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை கூற்று 35

9. 2022 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு மாற்றக்கூற்று 36

10. காசுப் பாய்ச்சல் கூற்று 37

11. குறிப்புகள் 38

12. குறிப்புகள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம், விளக்கக் குறிப்புகள் 44

13.கணக்காய்வு அறிக்கை 48

தலைவரின் செய்தி

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையானது (NHRDC) மனிதவள அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றுவதற்காக 1997 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க மனிதவள அபிவிருத்தி சபைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். மனிதவள மேம்பாடு தொடர்பாக கொள்கை வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் அரசாங்கத்திற்கும் வழங்குவதே சபையின் முக்கிய நோக்கமாகும்.

பட்டதாரி திட்டங்களின் கீழ் பணியமர்த்தப்பட்ட அபிவிருத்தி அலுவலர்கள் பற்றிய ஆய்வை இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையானது வெற்றகரமாக முடித்துள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான பயனுள்ள பயன்பாட்டை ஆராய்வதும் பரிந்துரைகளை விதப்புரை செய்வதும் ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.

அத்துடன், கம்பஹா, களுத்துறை, குருநாகல் மற்றும் மாத்தறை மாவட்டங்களில் நான்கு "ரக்கியா அருண" நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன. இதன் பிரதான நோக்கம் பள்ளிப் படிப்பை முடித்தவர்கள், பட்டதாரிகள் மற்றம் வேலை தேடுபவர்களுக்கு தொழில்சாலைகளில் / நிறுவனங்களில் கிடைக்கும் வேலைவாய்ப்புகள் மற்றும் அரச மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் உள்ள திறவாண்மை பயிற்சி வகுப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும். இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையானது 157 இளைஞர்யுவதிகளை வேலைவாய்ப்புகளுக்காகவும் 227 இளையுவதிகளை பயிற்சி நிறுவனங்களுக்கு பல்வேறு திறன் பயிற்சியைப் பின்பற்றவும் பரிந்துரைத்தது.

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திக் கொள்கையை இற்றைப்படுத்தித் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கின்றது. இந்தக் கொள்கையைப் புதுப்பிப்பதற்கும் தயாரிப்பதற்கும் ஒரு வரைவு ஆவணம் தயாரிக்ப்பட்டது. இது ஏற்கனவே ஒரு ஆலோசனைக் குழுவையும், சம்பந்தப்பட்ட துறைகளில் நிபுணத்துவத்தைக் கொண்ட செயல்குழுவையும் நியமித்துள்ளது.

புதிய ஆட்சேர்ப்புகள் அரசாங்கத்தினால் இடைநிறுத்தப்பட்டதால், பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் (ஆய்வு) மற்றும் 4 அபிவிருத்தி அலுவலர்களின் பதவி வெற்றிடம் 2022 இல் காணப்பட்டது. நிறுவனத்தின் முக்கிய விடயங்களை பூர்த்திசெய்வதற்கு ஒரேயொரு உதவிப் பணிப்பாளரும் நான்கு ஆய்வு உத்தியோகத்தர்களும் மட்டுமே உள்ளனர்.

அதேநேரத்தில், கோவிட் 19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி சூழ்நிலையின் கீழ் 'வீட்டிலிருந்து வேலை செய்தல்' என்ற எண்ணக்கருவின் மூலம், பணி அறிக்கையிடல், ஒருங்கிணைந்த கூட்டங்கள் மற்றும் பல்வேறு நலன்விரும்பிகளுடன் கலந்துரையாடல்களுக்கு ரோஸ்டர் முறையைப் பயன்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின் பயனுள்ள சேவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் ஊழியர்கள் சூம் செயலி (Zoom App) மூலம் தொடர்புகொள்ளப்பட்டனர்.

துசித பி. வனிகசிங்க
தலைவர்

1. நிறுவன பின்னணி மற்றும் நோக்கம்

மனித வள அபிவிருத்திக்கான முக்கிய பணிப்பொறுப்பை நிறைவேற்றுவதற்காக 1987 / 18 இலக்க தேசிய மனித வள அபிவிருத்தி சபை சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை நிறுவப்பட்டது. மனித வள அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் அமுல்படுத்தலுக்கு உதவுதல் மற்றும் அந்த சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய மனித வள அபிவிருத்தியின் அனைத்து செயற்பாடுகளுக்கும் முன்னுரிமை வழங்குவதன் மூலம் அனைத்து பணிப்பொறுப்புகளிலும் முதன்மையான வகிபாகத்தை கொண்டுள்ளது. மனித வள அபிவிருத்தி தொடர்பான கொள்கை ரீதியான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கும், அரசாங்கத்துக்கும் வழங்குதல் சபையின் பிரதான நோக்கமாகும்.

1.1 நிறுவனத்தின் அறிமுகம்

தேசிய மட்டத்திலான ஆலோசனை சபையாக 1987 ஜூன் 05 ஆம் திகதி இளைஞர் விவகார அமைச்சின் ஒரு அலகாக இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை ஆரம்பமானது. பின்னர் அது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் விடய பரப்பின் கீழ் 1987 / 18 இலக்க தேசிய மனித வள அபிவிருத்தி சபை சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய சுயாதீனமான நியதி சபையாக நிறுவப்பட்டது. அதிலிருந்து, அதாவது 2000 ஆண்டிலிருந்து இந்த நிறுவனம் தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டது. குறுகிய காலத்தினுள் மீண்டும் 2001 ஆண்டில் அது கல்வி மற்றும் கலாச்சார விவகார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர், அரசாங்கம் மாற்றமடைந்த பின்னர் திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் கீழ் நிறுவனம் கொண்டுவரப்பட்டது. குறுகிய காலத்தினுள் பல அமைச்சுக்களின் கீழ் செயற்பட்ட இந்த நிறுவனம் தற்போது பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகிறது.

1.2 நோக்கு

எமது ஊழியர் படையின் எதிர்காலம் தயார்

1.3 பணிக்கூற்று

மனித வள அபிவிருத்தியுடன் தொடர்புடைய வினைத்திறனான கொள்கைகள் மற்றும் புத்தாக்க தந்திரோபாயங்களை உருவாக்குதல், அமுல்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் இலகுபடுத்துதல்.

1.4 குறிக்கோள்

மனித வள அபிவிருத்தி தொடர்பில் கொள்கை ரீதியான வழிகாட்டல்களை அரசுக்கு வழங்குவதற்கு பொருத்தமான சட்டக கட்டமைப்பை உருவாக்குதல் இலங்கை மனித வள அபிவிருத்தி சபையின் குறிக்கோளாகும். மனித வள அபிவிருத்தி, செயன்முறைகளை திட்டமிடுதல், கொள்கை மீளாய்வு மற்றும் மனித வள ஆற்றலை அதிகரிப்பதற்கும் இந்த நிறுவனம் பொறுப்பாக இருக்கிறது.

சபையின் கடமைகளும் பணிகளும் தத்துவங்களும் :-

I. பின்வரும் மனித வள அபிவிருத்தி தொடர்பான தர்க்கரீதியான நியாயப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு அடங்கலாக அனைத்து துறைகளிலும் தேசிய மனித வள கொள்கை தொடர்பில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

   a. தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி
   b. விஞ்ஞானத்தையும் மற்றும் தொழில்நுட்பதையும் பிரயோகித்தல்
   c. வாழ்க்கை தரத்தை முன்னேற்றுதல்
   d. பலவீனமான குழு நபர்களுக்கான சமூக பாதுகாப்பை வடிவமைத்தல்
   e. பொருளாதார மறுசீரமைப்புடன் உரிமைகளை பேணுதல்

II. தேசிய கொள்கைக்கு ஏற்புடையதாக அரசுக்கு சமர்ப்பிப்பதற்கான மனித வள அபிவிருத்தி தொடர்பான திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் அமைச்சருக்கு விதந்துரை செய்தல்.

III. காலத்துக்கு காலம் மனித வள அபிவிருத்தி கொள்கை, அமுல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்தட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் பரிசீலித்தல், தேவையான சந்தர்ப்பங்களில் அவ்வாறான கொள்கை மாற்றங்கள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமைச்சருக்கு விதந்துரை வழங்குதல்

IV. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வள அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்பார்வை செய்தல், மற்றும்

V. இந்த சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயம் தொடர்பிலுமான எந்தவொரு கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக, ஏனைய எந்தவொரு அமைச்சருக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயத்துக்கு அவ்வாறான கருத்திட்டம் தொடர்பானதாக இருக்கும் போது, அந்த அமைச்சரின் ஒத்திசைவுடன் அமுல்படுத்தப்பட வேண்டும். மற்றும்

VI. சபையின் கருத்துக்கு அமைய தேசிய நோக்கங்களுக்கு ஏற்புடையதாக மனித வள அபிவிருத்திக்கு தேவையான அல்லது சாததகமான அல்லது எதிர்பாராது தோன்றும் ஏனைய அனைத்து கருமங்களையும் மேற்கொள்ளுதல்.

1.5 சபையின் அதிகாரம்

1997 / 18 இலக்க இலங்கை தேசிய மனித அபிவிருத்தி சபை சட்டத்தின் 16 (2) (1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய சபையின் அதிகாரம் பின்வருமாறானதாகும்,

a. சபையின் கருமங்களை நிறைவேற்றுவதற்கு தேவையாக இருக்கக்கூடிய அளவீடு, புலனாய்வு கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

b. மனித வள அபிவிருத்தியுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் விஷேட நிபுணர்கள், தொழில்வாண்மையாளர்கள் அல்லது சாதாரண மக்களின் கருத்தை கேட்கும் நோக்குடன் பொது அல்லது தனிப்பட்ட கலந்துரையாடல்களை நடத்துதல்.

c. இலங்கைக்கு வெளியே சர்வதேச நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புகளுடன் தொடர்புகளை உருவாக்குதல் மற்றும் பேணிவருதல்

d. இந்த சட்டத்தின் கீழ் அந்த கருமங்களை நிறைவேற்றுவதற்கு தேவையாக இருக்கக்கூடிய ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளை எட்டுவதற்கும் மேற்கொள்வதற்கும்

e. நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் மனித வள அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்தல்

f. இலங்கை மற்றும் ஏனைய நாடுகளில் மனித வள அபிவிருத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல் தரவு வங்கியை நிறுவுதல் மற்றும் பேணி வருதல்

g. ஏதாவதொரு வங்கியில் அல்லது வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்பு கணக்குகளை திறத்தல் மற்றும் பேணி வருதல்

h. அசையும் மற்றும் அசையா மானியங்கள் மற்றும் நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளுதல், பெற்றுக்கொள்ளுதல்.

i. மனித வள அபிவிருத்தியின் அனைத்து பிரிவுகள் தொடர்பாகவும் விஷேட நிபுணத்துவம் கொண்ட குழாத்தை விருத்தி செய்யும் நோக்குடன், அந்த அலுவலர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல்.

j. அந்த கருமங்களை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு தேவையான அவ்வாறான குழுக்கள், நிபுணத்துவ குழுக்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்களை நியமித்தல்.

k. தேவையானதென சபையால் கருதப்படும் புள்ளிவிபரங்கள் மற்றும் தரவுகளை அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதி சபைகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களிடமிருந்து கோருதல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல்.

l. சபையின் கருத்துக்கு அமைய, சபையின் கருமங்கள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல், பிரயோகித்தல் மற்றும் செயலாற்றுகைக்கு தேவையானதென கருதப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

2. மனிதவள அபிவிருத்தி சபையின் நிறுவனக் கட்டமைப்பு

இந்த சபையானது பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் தொழிற்படுகின்றது. அத்துடன் உள்:ராட்சியானது 1997 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் இருபது உறுப்பினர்களைக் கொண்டது. அவர்களில் பதினைந்து (15) நபர்கள் முன்னாள் அதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள் மீதமுள்ள ஐந்து உறுப்பினர்கள் பொருத்தமான நிறுவனங்களை சேர்ந்தவர்களாகவும் அதற்கு மேலதிகமாக சம்பந்தப்பட்ட துறைகளில் காணப்படும் அனுபவம் மற்றும் திறன்களைக் கருத்தில் கொண்டு 05 உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள் அவர்களில் இரண்டு நபர்கள் தனியார் துறையைச் சேர்ந்தவர்கள். எனினும், பதவிவழி அங்கத்தவர்களின் எண்ணிக்கை இலங்கை சோசலிசக் குடியரசு யாப்பின் 44,45 மற்றும் 47ஆம் பந்திகளின் கீழ் மேற்கொள்ளப்படும். விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அவர்களில் ஒருவரை நிறைவேற்று தலைவராக நியமிக்க சட்டத்தில் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மேலும் தலைவர் பிரதம நிறைவேற்ற அலுவலர் ஆவார். 1997ஆம் ஆண்டு 18ஆம் இலக்க தேசிய மனிதவள அபிவிருத்திச் சட்டத்தின் 3(1) (a) தொடக்கம் (o) வரையான பிரிவு மற்றும் 1978ஆம் ஆண்டு யாப்பின் 44ஆம் உறுப்பரைக்கு அமைவாக, சபையின் பதவிவழி அங்கத்தவர்களின் விபரங்கள.

1. செயலாளர், கல்வி மற்றும் உயர்கல்வி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு
2. செயலாளர், நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு
3. செயலாளர், சுகாதார விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு
4. செயலாளர், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு
5. செயலாளர், தொழில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு
6. செயலாளர், பொது நிர்வாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு
7. செயலாளர், இளைஞர் விவகார விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு
8. செயலாளர், கைத்தொழில் அபிவிருருத்தி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு
9. செயலாளர், விவசாய விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு
10. செயலாளர், திட்டமிடல் அமுலாக்கல் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு
11. தலைவர், முன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு
12. தலைவர், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற்துறை பயிற்சி அதிகாரசபை
13. தலைவர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு
14. பணிப்பாளர் நாயகம், முன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு

1997ஆம் ஆண்டு 18ஆம் இலக்க தேசிய மனிதவள அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவு 3(1) ற்கு அமைவாக 31.12.2022ஆம் திகதியில் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் விபரங்கள் பின்வருமாறு.

1. திரு. சிந்தக எஸ் லொக்குஹெட்டி, ஓய்வுபெற்ற அமைச்சின் செயலாளர், / பேராசிரியர்.காமினி சமரநாயக்க, முன்னாள் தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு / திரு. துசித பி வனிகசிங்க, ஓய்வுபெற்ற மாகாணசபையின் பிரதான செயலாளர் - தலைவர்
2. திரு .பி. ரனேபுர, ஓய்வுபெற்ற அமைச்சின் செயலாளர் / பேராசிரியர். ஜயந்த லால் ரத்னசேனர, உப வேந்தர், ஊவா வெல்லச பல்கலைக்கழகம்.
3. திரு. மகேஷ் கொடுவெல, சட்டத்தரணி/ பேராசிரியர். ஹிலபுரி எல்மோ சில்வா, சிரேஸ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.
4. திரு. சத்துரங்க கெப்பெட்டியாகம, ஆலோசனையாளர் / திரு. எம்.சீ.வி. ராஜனாதன், வங்கியாளர்
5. டாக்டர் (திருமதி) ரன்மலி பெரேரா, பெற்றோலிய விசேட நிபுணர/ திருமதி முதிதா சமாதனி கிரிவந்தெனிய, முன்னாள் தலைவி, சனச அபிவிருத்தி வங்கி.

ஆளுகை கவுன்சியின் அங்கத்தவர்களின் வருகை விபரங்கள்

		2022.03.07	2022.05.06	2022.07.19	2022.09.06	2022.10.14
01	திரு.சிந்தக எஸ் லொக்குஹெட்டி, தலைவர், இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி பேரவை.	√	√	√	√	√
02	பேரசிரியர். கபில பெரேரா/ திரு நிஹால் ரனசிங்க, செயலார், உயர் கல்வி மற்றம் தொழில்நுட்ப விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு	-	√	-	√	√
03	திரு.எம்.பி.டி.யு.கே.மாபா பத்திரன / திருமதி வசந்த பெரேரா/ திரு.ஆர்.பி.ஏ.விமலவீர, செயலாளர் தொழில்விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு	√	-	-	√	-
04	திரு.ஜே.ஜே.ரதனசிறி/ திரு.எம்.எம்.பி.கே.மாயதுன்ன, செயலாளர், பொது நிர்வாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு	-	-	-	-	√
05	டாக்டர்.(மேஜர் ஜெனரல்- ஓய்வுபெற்றஸ) எஸ்.எச்.முனசிங்க / திரு.எ.ஜே.எஸ். சந்திரகுப்தா, செயலாளர், சுகாதார விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு	√	√	-	√	-
06	ஜெனரல் தயா ரத்நாயக்க / திருமதி திலகா ஜயசுந்தர, செயலாளர், கைத்தொழில் அபிவிருத்தி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு	√	-	-	-	√
07	திரு.டி.எம்.எல்.டி.பண்டாரநாயக்க / திரு.பி.ஆர்.புஷ்பகுமார, செயலாளர், விவசாய விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர்	√	√	√	-	-
08	திரு.அனுராதா விஜேகோன் / டாக்டர் அமல் ஹர்ஷா, செயலாளர், இளைஞர் விவகார விடத்திற்கு பொறுப்பான அமைச்சர்	√	√	√	√	
09	சிரேஷ்ட பேராசிரியர்.நிரஞ்சன் டி குணவர்தன, செயலாளர், தொழில்நுட்ப அமைச்சு					√
10	திரு.பி.கே.யு.ஏ.விக்ரமசிங்க, தலைவர், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு	-	√	√	√	-
11	டாக்டர், கே.ஏ.லலிதாதீர, பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு	√	√	√	√	√
12	பேராசிரியர்.ஹரிஷ்சந்ர அபேகுணவர்தன, தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு	√	-	√	√	-
13	பேராசிரியர்.சம்பத் அமரதுங்க, தலைவர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு	√	-	√	√	-
14	திரு.தரங்க நளின் கம்லத் / திரு.ரூசிக அமரசேகர, தலைவர், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை	-	-	-	-	√
15	திருமதி.ஜே.ஜி.டி. சேனாநாயக்க, பணிப்பாளர் (பதில்), பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் / திருமதி.டி.எல்.டி.ஏ.ஆர்.ஜயசிங்க, பிரதிப் பணிப்பாளர், வெளிவாரி வளங்கள் திணைக்களம் / செல்வி.எச்.எல்.ஜே.கே.அமரசேகர, நிதி அமைச்சின செயலாளருக்கு பதிலான பிரதிநிதி	*	√	-	-	√
16	திரு.பி.ரனபுர, ஓய்வுபெற்ற செயலாளர் (நியமிக்கப்பட்ட அங்கத்தவர்)	√	√	√	√	√
17	திரு.மகேஷ் கொடுவெல, சட்டத்தரணி (நியமிக்கப்பட்ட அங்கத்தவர்)	√	√	√	-	-
18	டாக்டர் சத்துரங்க கெப்பட்டியாகம, குடல் சத்திரசிகிச்சை நிபுணர் (நியமிக்கப்பட்ட அங்கத்தரவர்)	√	√	√	-	-
19	டாக்டர் (திருமதி) ரனாலி பெரேரா, பெற்றொலியம் விசேட நிபுணர் (நியமிக்கப்பட்ட அங்கத்தவர்)	√	√	√	√	√
		13	**12**	**11**	**11**	**10**

√ பங்குபற்றியோர் மற்றும் வருகைதராதோர்

* நிதி அமைச்சின் செயலாளரின் பிரதிநிதி ஜே.ஜி.டி.திருமதி சேனாநாயக்க, பொது நிறுவனங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் (பதில்) 02 மார்ச் 2022 தொடக்கம் வேறொரு நிறுவனத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். மேலும், 28 பெப்பரவரி 2022 தொடக்கம் புதிய பிரதிநிதியான திருமதி.டி.எல்.டி.ஏ.ஆர்.ஜயசிங்க அந்தப் பதவிக்கு பதிலீடு செய்யப்பட்டுள்ளார்.

குறிப்பு : 1997ஆம் ஆண்டு 18ஆம் இலக்க மனித வள அபிவிருத்திக்கான சட்டத்தின் பிரிவு 3(1)(P) பிரிவுக்கு அமைவாக, உரிய அமைச்சின் கௌரவ அமைச்சரான தினேஷ் குணவர்தனவினால் பேராசிரியர் காமினி சமரநாயக்க தலைவராக நியமிக்கப்பட்டள்ளர். அதன்படி, திரு.சிந்தக எஸ். லொக்குஹெட்டி 17 ஒக்டோபர் 2022 அன்று பதவி விலகினார்.

பேரவையின் முக்கிய தீர்மானங்கள் - 2022

பட்டதாரி திட்டங்களின் கீழ் பணியமர்த்தப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களை திறம்பட பயன்படுத்துதல் பற்றிய கற்கை

அரச சேவையில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அபிவிருதி உத்தியோகத்தர்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான சிறந்த பயன்பாட்டினை ஆராய்வதற்கும் பரிந்துரைகளை வழங்குவதற்கும் NHRDC விசேட குறிப்புடன் கூடிய ஒரு கணக்கெடுப்பை மேல் மாகாணத்தில் நடாத்தியது. கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் மற்றும் எதிர்காலத்தில் பட்டதாரிபயிலுநர் திட்டங்களுக்கான பரிந்துரைகளை முன்னிலைப்படுத்தும் கற்கை அறிக்கை உபகமிட்டியிடம் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் பணிப்பாளர்சபை ஒப்புதல் அளித்துள்ளது.

அரசதுறை ஊழியர்களின் தரவு சேகரிப்பு

திரு.எம்.எம்.பி.கே.மாயதுன்ன, செயலாளர், பொது நிர்வாகம், உள் விவகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அவர்களால் முன்மொழிந்தவாறு, தேசிய மனிதவ வள அபிவிருத்திச் சபை இலங்கையில் உள்ள அனைத்து அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்களினதும் பதவியணி விபரங்களை அமைச்சுடன் இணைந்து சேகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதற்கமைவாக, பிரிவு வாரியாக, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி விபரங்கள், தற்போதுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் ஒட்டுமொத்த அரச சேவையில் உள்ள வெற்றிடங்கள் மற்றும் எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் ஓய்வுபெறுவதற்கு எதிர்பார்க்கும் ஊழியர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட விபரங்களை முதல்கட்டமாக சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஆய்வின் இரண்டாம் கட்டத்தில் அரசதுறையின் உண்மையான நிலையைப் பெற்றுக்கொள்வதற்கு நிறுவனத் தேவைகளை அடையாளம் காண்பது மற்றும் தனிப்பட்ட ஊழியர்களின் தரவு சேகரிப்பு என்பவை மேற்கொள்ளப்படும்.
இதனைக் கருத்தில் கொண்டு, தேவையான மாதிரிகளை உருவாக்கி இந்த ஆய்வை மேற்கொள்வதற்காக தேசிய மனிதவ வள அபிவிருத்திச் சபையின் நிர்வாகக் குழுவால் ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. நிபுணர் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

1. திருமதி.ஜே.எம்.திலகா ஜயசுந்தர, செயலாளர், கைத்தொழில் அமைச்சு – தலைவி
2. பொது நிர்வாகம், உள் விவகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் பரிந்துரை செய்யப்பட்டவர் (குழு அங்கத்தவர்)
3. கல்வி அமைச்சினால் பரிந்துரை செய்யப்பட்டவர் (குழு அங்கத்தவர்)
4. திரு.டபில்யூ அமரசேகர, தலைவர், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (குழு அங்கத்தவர்)

5. டாக்டர்.கே.ஏ.லலிததீர, பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு
6. டாக்டர்.ரனாலி பெரேரா, பெற்றோலிய விசேட நிபுணர் (குழு அங்கத்தவர்)
7. திருமதி.ஜே.ஏ.சீ.பீ.ஜயசிங்க, பணிப்பாளர், பதில் கடமை தே.ம.வ.அ.ச் (குழு அங்கத்தவர்)

கொள்கைகளைத் தீர்மானிப்பவர்களுக்கு வசதியளிப்பதற்காக ஆய்வின் முதல் கட்டத்தின் இறுதி அறிக்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

மனித மூலதன விழிப்புணர்வு இதழ் - 2022

2022ஆம் ஆண்டிற்கான மனித மூலதன மேம்பாடு குறித்த கட்டுரைகளைக் கொண்ட மனித மூலதன நுண்ணறிவு இதழ் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

புள்ளிவிபர செய்தியேடு - 2022

புள்ளிவிபர செய்தியேடு, 2022 இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் நிர்வாகக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. இந்த சஞ்சிகை பொதுக் கல்வி, மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி மற்றும் உயர் கல்வித்துறைகள் தொடர்பான முக்கிய புள்ளிவிபரங்களை உள்ளடக்கியிருக்கும். இணையத்தளத்தில் உள்ள இரண்டாம் நிலை தரவு மூலங்களான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கைகள், பல்கலைகழக மானிய ஆணைக்குழுவின் பல்கலைக்கழக புள்ளிவிரங்கள் போன்றவற்றின் அடிப்படையில் அனைத்து தரவுகளும் சேகரிக்கப்பட்டன. இந்த செய்தியேட்டின் தரவுகள் கல்வித்துறை தரவுகளில் ஆர்வமுள்ள ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு இவை அவசியமாகும்.


தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் பயிற்சி கொள்கை

தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் பயிற்சி கொள்கையானது, நிறுவனத்தின் ஊழியர்களுக்கு உள்திறன் மேம்பாட்டை வழங்குவதற்கும் பயிற்சி மற்றும் மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்குவதற்கும் தயாரிக்கப்பட்டது. அதன்படி, NHRDC யின் பயிற்சிக் கொள்கைக்கு பணிப்பாளர் சபையின் ஒப்புதல் வழங்கப்பட்டது.

தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் 26 ஏப்பிரல் 2022ஆம் திகதி சுற்றுநிரூப இலக்கம் 03/2022 இன் நியதிக்கு அமைவாக அரச செலவுகளைக் கட்டுப்படுத்தல்

இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிதி நெருக்கடியின் காரணமாக நிதி அமைச்சின தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களம் அரச நிதியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்களை காலத்திற்கு காலம் வெளியிட்டு வருகின்றது. அதன்படி, தேசிய மனிதவள அபிவிருத்தி சபை சுற்றறிக்கையைப் பின்பற்றி செலவினங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

3. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை – நிறுவன கட்டமைப்பு



4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் ஆளணி மற்றும் அவர்களது பதவிகள்

பதவி நிலை	அனுமதிக்கப்பட்ட ஆளணி	31.12.2022 இல் பணியாளர்கள்	31.12.2022 இல் பதவி வெற்றிடம்	பெயர்
தவிசாளர்(பதில்)	01	-	01	
பணிப்பாளர்	01	-	01	-
உதவிப் பணிப்பாளர்	03	02	01	திருமதி. ஜெ.ஏ.சி.பீ. ஜயசிங்க திருமதி. எஸ்.எஸ். களுஆராச்சி
சபையின் செயலாளர்/ சட்ட அலுவலர்	01	01	-	திருமதி. ஜி.ஜி. கசுனி உத்பலா
ஆராய்ச்சி அலுவலர்	04	04	-	திரு. த. செந்தில்நாதன் செல்வி. என்.டி.எதிரசிங்கே திரு. ஆர்.டி.சி.எஸ். ராஜபக்ச செல்வி. யு.எம். வீரசேன
நிர்வாக உத்தியோகத்தர்	01	01	-	திருமதி.கே.வி.எஸ். எரங்கா
மொழிபெயர்ப்பாளர்	01	-	01	-
அபிவிருத்தி உத்தியோகத்தர்	04	-	04	-
தவிசாளர் பீ.ஏ	01	-	01	-
முகாமைத்துவ உதவியாளர்	08	05	03	திரு.சி.ஆர்.மத்தகே திருமதி.எம்.ஜி.என். டில்ஹரி திருமதி. கே.சி.முத்துமால திருமதி. ஆஸா எதிரசிங்க திருமதி. ஜி.எம். சத்தமங்கல
சாரதி	04	04	-	திரு.ஜி.எம்.பின்னதுவ திரு.டெறன்ஸ் பியால் திரு.ஆர்.சி.ஆர். ஜயவர்த்தன திரு.ஹயான் ஜீவந்த
அலுவலக உதவியாளர்	04	03	01	திரு.என்.ஜி.நதுன் மதுரங்க திரு.டபிள்யு.ஆர்.ஏ.பிரினஸ் கிரான்வில் செல்வி.ஏ.நயனா பிரியதர்சினி
மொத்தம்	**33**	**20**	**13**	

4.1 ஆட்சேர்ப்புகள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டிற்கு அமைவாக சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 33 ஆகும். ஆனால்இல் ஆளணி 20 ஆக இருந்தது. அரசாங்கத்தினால் ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டதனால் இந்த ஆண்டில் எந்தவொரு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் பட்டிருக்கவில்லை. திரு சிந்தக்க எஸ்.லொக்குஹேட்டி தலைவர/ பிரதான நிறைவேற்று அதிகாரியாக 14.02.2022ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டதுடன் அவர் 17.10.2022ஆம் திகதியில் இருந்து பதவியிலிருந்து விலகினார்.

4.2 இராஜினாமாக்கள்

பெயர்	பதவி	பதவி விலகிய திகதி
திரு.கெ.பி.பி.பெரேரா	அபிவிருத்தி உத்தியோகத்தர்	03.02.2022

4.3 பணி நியமனங்களின் விபரங்கள்

பொது நிர்வாகம், உள் விவகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்ட பணி நியமனங்கள்.

பெயர்	பதவி	பணி நியமனத் திகதி
1. செல்வி.டபில்யூ.என்.ஆர்.பி.சீ.எல்.குமாரி	அபிவிருத்தி உத்தியோகத்தர்	05.04.2022
2. திருமதி.கே.கே.சீ.எஸ்.விக்ரமநாயக்க	அபிவிருத்தி உத்தியோகத்தர்	07.04.2022

4.4 உள்ளுர் பயிற்சி

பணியாளர்களின் பாட அறிவை மேம்படுத்தும் நோக்கில் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அவர்களுக்கு உள்ளுர் பயிற்சி வழங்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் கலந்து கொண்ட அதிகாரிகளின் விபரங்கள் பின்வருமாறு.

	அலுவலரின் / குழுவின் பெயர்	பதவி	பயிற்சி நிகழ்சி	நிறுவனம் / வளநபர்
1.	NHRDC இன் அனைத்து ஊழியர்களுக்கும்	NHRDC இன் அனைத்து ஊழியர்களுக்கும்	"பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் நடைமுறைகள்" தொடர்பான பயிற்சி	திரு.நிரஞ்சன் பதிரண
2.	NHRDC இன் அனைத்து ஊழியர்களுக்கும்	NHRDC இன் அனைத்து ஊழியர்களுக்கும்	"எண்ணக்கரு மாற்றம்" பயிற்சி நிகழ்ச்சி	டாக்டர். சுனில் ஜயந்த நவரத்ன
3.	NHRDC இன் அனைத்து ஊழியர்களுக்கும்	NHRDC இன் அனைத்து ஊழியர்களுக்கும்	"வீட்டுத் தோட்டம்" விழிப்புணர்வு நிகழ்ச்சி	திரு.மஞ்சுள நாகஹவத்த
4.	திரு.டி.செந்தில் நாதன்	ஆராய்ச்சி அலுவலர்	Data Visualization and Analytics with MS Excel & Power BI பற்றிய ஒன்லைன் நிகழ்ச்சி	மொரட்டுவை பல்கலைக்கழகம்
5.	செல்வி.யு.எம்.வீரசேன	ஆராய்ச்சி அலுவலர்		

4.5. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு - 2022

2022 ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒரு தடவை மட்டுமே கூடியதுடன், பின்வரும் விடயங்கள் தொடர்பான முகாமைத்துவ தீர்மானங்களை சபைக்கு விதந்துரைத்தது.

- திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட மதிப்பீடு – 2021
- வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு – 2022
- கணக்காய்வு அறிக்கை 13(7)(a) - 2020
- நிதியியல் கணக்கீடு – 2021
- அதிகாரத்தை சாட்டுதல் - 2022
- சபையை நிர்வகிப்பதற்கான பல்வேறு முகாமைத்துவ தீர்மானங்கள்

சபையின் பின்வரும் உறுப்பினர்கள் 2022 ஜனவரி 01ஆம் திகதியில் இருந்து 31 டிசம்பர் 2022 வரை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் அடங்கியிருந்தனர்.

❖ 2022.02.17 – 1ஆவது கூட்டம்

1. திருமதி.ஜே.டி.ஜி.சேனாநாயக்க, பணிப்பாளர்(பதில்), அரச தொழில்முயற்சித் திணைக்களம் -குழுவின் தலைவி
2. திரு.ஆர்.எச். பியசேன – (சபையின் அங்கத்தவர்) – குழுவின் அங்கத்தவர்
3. திரு.கே.ஏ. லலிததீர, பணிப்பாளர் நாயகம் /TVEC - குழுவின் அங்கத்தவர்
4. திருமதி.ஓ.பி.ஆர் தமயந்தி, பிரதான உள்ளக கணக்காய்வாளர் - பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – அவதானிப்பாளர்
5. திருமதி.எல்.ஏ.ஜி.எஸ். குணசேகர, கண்காய்வு அத்தியட்சகர், அரச கணக்காய்வு அலகு– அவதானிப்பாளர்

5. 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

5.1 2020/21 பட்டதாரி திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களின் வினைத்திறனான பயன்பாடு மீதான கற்கை (கொழும்பு மாவட்டத்திற்கான விசேட உசாவலுடன்)

இலங்கை பட்டதாரிகளின் வேலையின்மை விகிதம் கணிசமாக அதிகரித்துள்ளது. இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களின் சராசரி வேலைவாய்ப்பு பெறும் விகிதம் 65.5% (பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு, 2018) ஆகும். மிகப்பெரிய அரசாங்க முதலீடுகளை உள்வாங்கிய ஒரு வளமாக அதிக வேலையின்மை விகிதம் மற்றும் பட்டதாரிகளின் குறைந்த வேலைவாய்ப்பு விகிதம் ஆகியவை எந்த அரசாங்கத்திற்கும் எப்போதும் முக்கியமான பிரச்சினைகளாக உள்ளன.

எனவே, காலத்துக்கு காலம் வேலையற்ற பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக பாரியளவில் பணியமர்த்துவதற்கு அரச துறையினர் முன்வந்துள்ளனர். கடந்த காலங்களில் வேலையற்ற பட்டதாரிகள் திட்ட அலுவலர்களாக அரச துறையில் உள்வாங்கப்பட்டனர்.

21.12.2011 அன்று அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்ட அலுவலர்களினது சேவையானது 14.02.2012ஆம் திகதியிடப்பட்ட 1745/11ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக நிறுவப்பட்டது. 01 ஒகஸ்ட் 2011ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் வேலையில்லாப் பட்டதாரிகள் அரச நிறுவனங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

இந்த வேலையில்லாப் பட்டதாரிகள் அரசாங்கத்திற்கு 01 ஒகஸ்ட் 2011 இருந்து நிகழ்ச்சித்திட்ட அலுவலர்களாக இணைக்கப்பட்டனர். 2012இல் நிகழ்ச்சித்திட்ட அலுவலர்களினது சேவைக் குறிப்பானது ‘‘அபிவிருத்தி அலுவலர் சேவை எனவும் நிகழ்ச்சித்திட்ட அலுவலர் எனக் குறிப்பிடப்பட்ட இடங்களில் எல்லாம் அபிவிருத்தி அலுவலர் எனவும் திருத்தப்பட்டது.

60,000 வேலையில்லாப் பட்டதாரிகளை இலக்காகக் கொண்டு, வேலையில்லா பட்டதாரிகளை அரச துறைக்கு உள்வாங்கும் சமீபத்திய பட்டதாரி திட்டம் 2020இல் தொடங்கப்பட்டது. அவர்களில், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தகவலுக்கு அமைவாக, 53,177 வேலையற்ற பட்டதாரிகள் நியமனங்களை ஏற்றுக்கொண்டுள்ளனர் (27.04.2022 இன் படி) அவர்களின் 20,697 பேர் மத்திய அரச நிறுவனங்களிலும், 29,085 பேர் மாகாண சபைகளிலும் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். மாகாண சபைகளில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்களில் பெரும்பான்மையானோர் (21,699) பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

பொறுப்பு வாய்ந்த அரசாங்க அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் பலர் கூறியதுபோல், அரச துறை நிரம்பி வழிகின்றது. அரச நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் படி, அரச துறையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின்

எண்ணிக்கை 85,585 ஆகவும், அதிக எண்ணிக்கையிலான வேலையற்ற பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக அரச துறைக்கு உள்வாங்கிய திட்டமாகவும் முனைப்புறுத்தலாம். எனவே 2020/2021 பட்டதாரி திட்டத்தின் கீழ் புதிதாக நியமிக்ப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களின் பயனுள்ள பயன்பாட்டை ஆராய்கின்றதுடன் அவர்களின் செயல்திறனை மேம்படுத்தவதற்கான பரிந்துரைகளை வழங்குகின்றது.

ஆய்வு நோக்கங்களை அடைவதற்காக, முதன்மை மற்றும் இரண்டாம் நிலை தரவு இரண்டும் பகுப்பாய்வு நோக்கத்திற்காக சேகரிக்கப்பட்டன. முதன்மை தரவு சேகரிப்பின் கீழ் தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் ஆய்வுக் குழு, கொழும்பு மாவட்டத்தின் 13 பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய அடுக்கடுக்கான சீரற்ற மாதிரி முறை மூலம் கொழும்பு, திம்பிரிகஸ்யாய, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை, மஹரகம, கடுவெல, கொலன்னாவை, கெஸ்பாவ, தெஹிவல, பாதுக்க, இரத்மலானை, மொரட்டுவை, சீதாவக்க மற்றும் ஹோமாகம பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்ட 400 பட்டதாரி பயிற்சியாளர்களின் (அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்) மாதிரியிலிருந்து கட்டமைக்கப்பட்ட கேள்வித்தாள் கணக்கெடுப்பை நடாத்தியது. தரவு சேகரிப்பு செயன்முறைக்கு பிறகு 364 கேள்விக்கொத்துகள் மட்டுமே எஞ்சியுள்ளது. கேள்வித்தாள்களைத் தவிர, பல முக்கிய தகவலறிந்த நேர்காணல்கள் (KIIs) மற்றும் கவனக்குவிப்பு குழு விவாதங்கள் (FGDs) அரசாங்க அதிகாரிகளுடன் நடாத்தப்பட்டன.

மாதிரி கணக்கெடுப்பின் படி, பதிலளித்தவர்களில் (44.5%) வீதத்தினர் வேலைவாய்ப்பு முன்னனுபவ வரலாற்றைக் கொண்டுள்ளனர். அவர்கள் தனியார் துறை வேலைகளை விட்டு "உயர் வேலை பாதுகாப்புக்காக" அரசதுறையில் சேர்ந்துள்ளனர். இவை தகவலறிந்த நேர்காணல்கள் (KIIs) மற்றும் கவனக்குவிப்பு குழு விவாதங்களில் (FGDs) நிரூபிக்கப்பட்டது. அரச ஊழியர்களுக்குக் கிடைக்கும் வேலைப் பாதுகாப்பு மற்றும் ஓய்வூதியத் திட்டங்களுக்காக அரச துறையில் சேர, தனியார் துறையில் அதிக வருமானம் உள்ள வேலைவாய்ப்புகளை விட்டு வெளியேறிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருப்பதாகவும் அதிகாரிகள் கூறினர். பதிலளித்தவர்களில் 83.9% வீதமானோர் முன்பு தனியார் துறையில் பணியாற்றியவர்களாவர். அவர்களின் வெளிப்பாடு மற்றும் அனுபவம் அரச நிறுவனங்களின் செயல்திறனை அதிகரிக்க பயன்படுத்தப்படலாம்.

மேலும், அரச துறையின் நடைமுறைகள் பற்றிய அறிவு அவர்களுக்கு இல்லாதது வினைத்திறன் குறைவடைவதற்கு மிக முக்கியமான அம்சமாகும். துறைசார்ந்தவர்களின் நேர்காணல்களினூடாக (KIIs) அபிவிருத்தி அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளைச் செய்வதற்கும், நிறுவனம் சீராகசெயல்படுவதற்கும் மிக அடிப்படையிலான மற்றும் வழக்கமான பயிற்சி தேவை என்பது தெரியவந்தது.

பகுப்பாய்வின் படி, பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் (59.62%) கொடுக்கப்பட்ட வசதிகளில் திருப்தியடைந்துள்ளனர். பதிலளித்தவர்களில் (59.62%) கொடுக்கப்பட்ட வசதிகளில்

அதிருப்தி அடைந்துள்ளனர்.(repeat cut down) இதற்கு நேர்மாறாக, கூர்ந்து ஆராயும் போது பதிலளித்தவர்களில் மிகக் குறைந்த சதவீதத்தினரே கதிரைகள் (33.7%), மேசைகள் (32.7%) மற்றும் இணைய வசதிகள் கொண்ட கணணிகள் (21%) ஆகியவற்றைக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு அடிப்படை வசதிகள் இல்லை.

துறைசார்ந்தவர்களின் நேர்காணல்களினூடாகவும் (KIIs) மற்றும் இலக்குகுழு கலந்துரையாடல்களில் (FGDs) பங்கேற்ற அனைத்து அராசாங்க அதிகாரிகளும் பணியமர்த்தப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திறம்பட பயன்படுத்தப்படவில்லை என்பதை ஒப்புக்கொண்டனர். பல அபிவிருத்தி அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை செய்வதற்கும், நெருக்கமான மேற்பார்வையின்றி விடயங்களைச் செய்வதற்கும் ஆற்றல் உள்ளது என்று அவர்கள் கூறினர். மேலும், பெரும்பான்மையானவர்கள் சமீபத்தில் பட்டம் பெற்ற இளைஞர்கள் என்பதால், அவர்களிடமிருந்து அதிகபட்ச சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற அவர்கள் தெரிவித்தனர். அந்த வகையில், இது நிறுவனத்திற்கும் அபிவிருத்தி அலுவலர்களுக்கும் நன்மை பயக்கும். இது தற்போதுள்ள திறனை மேம்படுத்தும் மற்றும் நிறுவனத்தின் செயல்திறன் மேம்படும் போது புதிய ஆற்றல்களை உருவாக்க உதவும்.

சேகரிக்கப்பட்ட அனைத்து தகவல்களையும் பகுப்பாய்வு செய்த பிறகு, ஆய்வு பல சிக்கல்கள் மற்றும் சாத்தியமான பரிந்துரைகளை அடையாளம் கண்டுள்ளது. முக்கிய சிக்கல்கள் மற்றும் பரிந்துரைகள் பின்வருமாறு:

பிரச்சினைகள்	**பரிந்துரைகள்**
1. அனுபவத்துறை மற்றும் நியமனம் என்பவற்றுக்கு இடையே பொருந்தாத தன்மை.	❖ அபிவிருத்தி உத்தியோகத்தர்களை கடமையிலமர்த்தும் போது அவருடைய கல்வி மற்றும் நிபுணத்துவ அனுபவங்களை கருத்தில் கொள்ளல் வேண்டும்.
2. களக் கற்கையுடன் பதவி வகிபாகத்திற்கிடையில் பொருந்தாத்தன்மை	❖ அவருடைய பதவி வகிபாகத்தை திருப்திகரமாக மேற்கொள்வதற்கு அவசியமான **குறித்த துறையில்** பயிற்சியை வழங்கல் வேண்டும்.
3. அலுவலக முகாமைத்துவம் / அலுவலக நிர்வாகம் தொடர்பாக போதிய அறிவின்மை	❖ பொது அலுவலக பணிகளை மேற்கொள்வதற்கான பயிற்சிகளை வழங்குதல் ❖ முன்னர் தனியார் துறையினரின் அனுபவத்தைப் பெற்றக்கொள்ளாதவர்களுக்கு அந்த அனுபவத்தை வழங்குதல்.
4. மோசமான செயலாற்றுகை மதிப்பீடு	❖ களஉத்தியோகத்தர்களை கண்காணிப்பதற்கு சரியானதொரு பொறிமுறை வகுக்கப்படவேண்டும். ❖ முறையான செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமையும் மற்றும் செயலாற்றுகையை செயலாற்றைக்

	குறிகாட்டியை அறிமுகப்படுத்தல். ❖ அவர்களுடைய சேவையை மதிப்பிட்டு போற்றி பாராட்டுகள் வழங்கல் வேண்டும்.
5. உசிதமற்ற ஆட்சேர்ப்பு மற்றும் தேர்வு நடைமுறை	❖ ஆட்சேர்ப்பு மற்றும் தேர்வு நடைமுறை முறைப்படுத்தப்படுதல் வேண்டும்.
6. சேவைகளை வழங்கும் போது அபிவிருத்தி அலுவலர்களினால் சவால்கள் எதிர்நோக்கப்படுகினற்து.	❖ சிறந்த வேலைச்சூழல் காணப்பட வேண்டும்.

மேலதிக பரிந்துரை:

- ❖ ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்படும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு முழுமையான பயிற்சி வழங்க வேண்டும்.

பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கான பரிந்துரைகள் :

- ❖ ஒரு பட்டதாரியானவர் தன்னை சந்தைப்படுத்திக் கொள்ளவும், தொழிற் சந்தையில் ஒரு இடத்தைப் பெறவும் முடியும் என்பதால், அரச துறை வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கு அரசாங்கம் சட்டபூர்வமாக கடமைப்பட்டிருக்கவில்லை என்பதை பொது மக்களுக்கு உணர்த்த வேண்டும்.
- ❖ வேலையற்ற பட்டதாரிகளுக்கு நலன்களை வழங்குவதை விட அரசதுறை பதவியணி ஆட்சேர்ப்புக்கு புறம்பாக பட்டதாரிகளுக்கான தொழிலுக்கு தேவையான தொழிநுட்ப திறன்கள் மற்றும் தொழிசார்திறண்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.
- ❖ வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப் திறன், தொழில்நுட்பத் திறன்கள் மற்றும் தொழில்முறை அபிவிருத்தித் திட்டத்திற்கு உட்பட்டு, அரச துறைக்கு பதவியணிக்குப் புறம்பாக அவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு பதிலாக, வேலையின்மை நலன்கள் திட்டத்தை அறிமுகப்படுத்தல்.
- ❖ ஒரு வருடத்திற்கான அரச சேவையின் அனைத்து பதவிகளிலும் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைக் கணித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கும், அரச சேவை பதவிகளுக்கு தேவையான பட்டதாரிகளை முன்னறிவிப்பதற்கும் ஒரு நிறுவனம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.
- ❖ பட்டதாரிகளை முறையான ஆட்சேர்ப்புதெரிவு பொறிமுறையின் மூலம் அரச சேவைக்கு உள்வாங்குதல்.
- ❖ தொழிலாளர் தேவைக்கு (மென் திறன்கள் மற்றும் வன் திறன்கள்) பொருந்தும் கல்வி முறையில் சீர்திருத்தங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

- ❖ திறமையான மற்றும் பயனுள்ள சேவையை வழங்க ஒவ்வொரு பட்டதாரியும் குறைந்தபட்சம் ஆறு மாதத்திற்கு தனியார் துறை நிறுவனத்தில் இணைக்கப்பட்டு பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.
- ❖ கல்வியானது நாட்டிற்கும் தனிநபர்களுக்கு நன்மை பயக்கும் தொழிலதிபர்களை உருவாக்குவதை இலக்காகக் கொள்ள வேண்டும்.
- ❖ கடமை ஒதுக்கீடு மற்றும் வடிவமைப்பு பயிற்சிகளின் போது வெவ்வேறு தலைமுறையினரின் அபிலாஷைகள், திறன்கள், மற்றும் மனப்பாங்குகள் போன்றவற்றை கருத்தில்கொள்ள வேண்டும்.

5.2 முன்னுரிமை துறைகளுடன் தொடர்புடைய மனிதவள அபிவிருத்திக் கொள்கையின் வளர்ச்சிக்கான உத்திகளைக் கண்டறிதல்:

5.2.1 20 கைத்தொழில்துறையினருடன் கூட்டம் நடாத்தப்பட்டது

கைத்தொழில் அமைச்சின் கீழ் பதிவுசெய்யப்பட்ட 20 கைத்தொழிற்துறைகளின் பிரதிநிதிகளுடன் NHRDC தொடர் விவாதங்களை நடாத்தியது. இந்தத் தொழில்கள் எதிர்கொள்ளும் சமகால மனிதவளப் பிரச்சினைகளை அடையாளம் காண்பதே இந்த கலந்துரையாடல் முக்கிய நோக்கமாகும். 20 தொழிற்துறைகள் பின்வருமாறு:

1. பொதியிடல் கைத்தொழிற்துறை
2. பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக் கைத்தொழிற்துறை
3. தும்புக் கைத்தொழிற்துறை
4. பதப்படுத்தப்பட்ட உணவுக் கைத்தொழிற்துறை
5. வாசனைத் திரவியக் கைத்தொழிற்துறை
6. இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிற்துறை
7. பால் மற்றும் பால் சார்ந்த பொருட்கள் கைத்தொழிற்துறை
8. வர்ணப்பூச்சு, இரசாயனப் பொருட்கள் மற்றும் அச்சிடுதல் கைத்தொழிற்துறை
9. இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் கைத்தொழிற்துறை
10. மரம் மற்றும் மரம் சாரந்த கைத்தொழிற்துறை
11. மோட்டார் வாகன உதிரிப்பாக கைத்தொழிற்துறை மற்றும் வாகன ஒருங்கிணைத்தல்
12. படகு கட்டுமானக் கைத்தொழிற்துறை
13. பீங்கான், ஓடு, வெண்களிமண் மற்றும் கிரனைட் கைத்தொழிற்துறை
14. மின்சார மற்றும் மின்னிலத்திரனியல்
15. கனிய மற்றம் கனியம் சார் பண்டக் கைத்தொழிற்துறை
16. பாதணி மற்றும் தோல் கைத்தொழிற்துறை
17. ஒளதடக் கைத்தொழிற்துறை
18. அழகுசாதனப் பொருட்கள் கைத்தொழிற்துறை
19. உருக்கு, வார்ப்பச்சு மற்றும் இயந்திரக் கைத்தொழிற்துறை
20. புடவை மற்றும் ஆடைகள் கைத்தொழிற்துறை

மேற்கூறிய கைத்தொழிற்துறைகளுடன் நடாத்தப்பட்ட இந்தத் தொடர் கலந்துரையாடல்களின் மூலம், அனைத்து தொழில் துறைகளும் எதிர்கொள்ளும் மிகவும் பொதுவான மனிதவளப் பிரச்சினை புத்திஜீவிகளின் வெளியேற்றம் என்றும் கண்டறியப்பட்டது. அதற்கேற்ப, உள்ளூர் தொழில்களை பாதிக்காத வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை எவ்வாறு ஊக்குவிப்பது என்பதை அடையாளம் காண ஒரு கருத்துத்தாள் உருவாக்கப்பட்டது. பின்வரும் பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

1. வெளிநாட்டு வேலைகளுக்கு சில வேலைகளுக்கு ஒப்புதல் அளிக்கும் போது, அந்த குறிப்பிட்ட வெளிநாட்டு வேலையிலிருந்து எதிர்பார்க்கப்படும் பணம் மற்றும் உற்பத்தி இழப்பு அல்லது தொழிலாளர்கள் நாட்டை விட்டு வெளியேற அனுமதிப்பதன் மூலம் ஏற்படும் செலவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு முழுமையான செலவு-பயன் பகுப்பாய்வினை மேற்கொள்ளதல் வேண்டும்.
2. தொழில்நுட்பம் அல்லாத புலம்பெயர்ந்த தொழிலாளர்களை ஊக்குவிக்கவும் மற்றும் உள்ளூர் தனியார் துறையைப் பாதிக்காமல் தொழில்நுட்ப புலம்பெயர்ந்த தொழிலாளியை அனுப்ப சரியான வடிகட்டுதல் நடைமுறையைப் பேணுதல் வேண்டும்.
3. தனியார்துறையின் வெற்றிடத்தை நிரப்ப, திறன் தேவையைப் பூர்த்திசெய்ய புதிய தொழில்பயிற்சி வகுப்புகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க தற்போதுள்ள தொழில்பயிற்சி நிறுவனங்களின் வசதிகள் மற்றும் திறன்களை மேம்படுத்துதல் வேண்டும். சில தொழில்களில் உள்ள சில திறன் பற்றாக்குறைகள் கீழே உள்ளன.
    - அகழ்வுக் கைத்தொழிற்துறை – தொழில்நுட்பவியலாளர்கள், அகழ்வு இயந்திர தொழிற்படுத்துனர்கள், வெல்டர்கள், மேசன்கள்
    - மண்பாண்ட கைத்தொழிற்துறை – முப்பரிமாண வடிவமைப்பாளர்கள், இரு பரிமாண வடிவமைப்பாளர்கள் மற்றும் கிரபிக் வடிவமைப்பாளர்கள்
    - பதப்படுத்தப்பட்ட உணவுக் கைத்தொழிற்துறை - உணவு கையாளுணர்கள் (பயிற்சி நிறுவனம் இல்லை)
    - தும்பு கைத்தொழிற்துறை – தொழில்நுட்பவியலாளர்கள்
    - பொதியிடல் கைத்தொழிற்துறை – விசேட பயிற்சி நிறுவனம் இல்லை

4. அரசாங்க தொழில்பயிற்சி நிறுவனங்களினால் வழங்கப்படும் தொழிற்துறை பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதற்காக டொயாட்ட மற்றும் டீவிஎஸ் லங்கா போன்ற மேம்பட்ட வசதிகளுடன் கூடிய பொது மற்றும் தனியார் பயற்சி வழங்குனர்களுக்கு இடையே அரச மற்றும் தனியார் பயிற்சி வழங்கல் நிகழச்சித்திட்டமொன்றைத் தொடங்குதல்.

5.2.2 நிர்மாணிப்புத்துறையில் மனிதவளத்தை மேம்படுத்துவதற்கான உத்திகளை அடையாளம் காணல்

நிர்மாணிப்புத்துறையில் உள்ள மனிதவள அபிவிருத்திப் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கு, நிர்மாணிப்புத்துறையின் பிரதிதிதிகளுடனான கலந்துரையாடல் முன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி அமைச்சின் கேட்போர்கூடத்தில் 29.03.2022அன்று நடைபெற்றது.; அதில் பின்வரும் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் பங்குபற்றினார்கள். பொறியியலாளர். எல்சீ.கே.கருணாரத்தன, பிரதிப் பொது முகாமையாளர் (TRD), மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம் (CECB), திரு.எல்.பி.ஜயசுந்தர, பிரதிப் பொது முகாமையாளர்(HR &A) CECB, திரு.லால் தென்னகோன், சிரேஸ்ட உதவிச் செயலாளர், இலங்கை நிர்மாணிப்பு சம்மேளனம் (CCI), திருமதி.ஜே.ஏ.என்.என்கே.ஜயகொடி, பணிப்பாளர், நிர்மாணிப்பு கைத்தொழிற்துறை அபிவிருத்தி அதிகாரசபை (CIDA), பிரதிப் பணிப்பாளர், CIDA, திரு.சந்திரா குமார கருணாதிலக, குழு முகாமைத்துவ நிதி மற்றும் முகாமைத்துவ நிர்வாகம், சியரா கென்ஸ்ரக்சன் லிமிடட், திரு.மஞ்சுள ஹேரத், தலைவர், மனிதவளம் மற்றும் நிர்வாகம், இன்டர்நஷனல் கன்ஸ்டக்சன் கொன்ஸ்ரியம் (பிறைவட்) லிமிடட், (ICC), திரு.நளிந்து சருகளிகே, மனிதவள முகாமையாளர், டுடாவே பிரதர்ஸ் (பிறைவட்) லிமிடட், திரு சுனில் லியனகே, முகாமையாளர், பிரிகி எஞ்சினியரிங் (பிறைவட்) லிமிடட், திருமதி.டபில்யூ.என்.விஜேரத்ன, பிரதி முகாமையாளர் - மனிதவளம், சங்கன் கென்ஸ்கைசன் (பிறைவட்) லிமிடட், திரு மஞ்சள விதானபத்திரன, பதில் பணிப்பாளர் (கைத்தொழில் பிததிநிதி) /TVEC, திரு..எரந்திக திசாநாயக்க, தேசிய கருத்திட்ட ஒருங்கிணைப்பாளர், சர்வதேச தொழிலாளர் அமைப்பு, (ILO) மற்றும் செல்வி. பூர்ணிமா கருணாரத்ன, பிரிகி எஞ்சினியரிங் சேர்விஸ் பிறைவட் லிமிடட் போன்றோர் கலந்துகொண்டனர்.

இந்த கலந்துரையாடலின் ஊடாக அடையாளம் காணப்பட்ட மனிதவ வளப் பிரச்சினைகள்;

- நிர்மாணிப்புத்துறையின் பெரும் பற்றாக்குறையாக மேசன்கள், தச்சர்கள், வர்ணம் பூசுபவர்கள் மற்றும் அலுமினியம் பட்டி பொருத்துபவர்கள் மற்றும் ஒடு அடுக்குனர்களுக்கான தொழில்கள் உள்ளன.
- கனரக இயந்திர இயக்குனர்கள், நிர்மாணத்துறை இயந்திய மெக்கானிக் மற்றும் கொங்கிறீட் தொழிலாளர்களின் பற்றாக்குறை உள்ளது.
- மரத்திற்குப் பதிலாக அலுமினியத்தைப் பயன்படுத்துவது பெருகிய முறையில் அலுமினிய வேலைக்கான கைவினைஞர்களின் தேவை அதிகரித்து வரும் போக்கில் காணப்படுகின்றது.
- கைவினைஞர் பிரிவில் குறிப்பாக கொத்துத் தொழிலில் இளைஞர்களை விட வயதானவர்கள் / வயதுக்கு மேற்பட்டவர்கள இத்துறையில் உள்ளனர் என்பதை இது வெளிப்படுத்துகின்றது.

- குறைந்தபட்ச செயல்திறன் மதிப்பீட்டு முறைமைகள் மற்றும் திறன் இடைவெளிகளை அடையாளம் காணுதல் மற்றும் திறன் மேம்பாட்டுத் தேவைகள் ஆகியவை கீழ் மட்டத் தொழில்களின் நடைமுறைப்படுத்தப்படுகினறன.
- எப்போதும் கருத்திட்டங்கள் வரையறுக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் செயல்படுத்தப்படுகின்றன. எனவே குழுவிற்கு பயிற்சி அளித்தல் என்பது கைத்தொழிற்துறையில் பின்னுரிமை ஆகியுள்ளது.
- கைவினைஞர் மட்டத்தில் உள்ள பெரும்பாலான தொழில்கள் NVQ 3 & 4 நிலைகளில் உள்ளன. இருப்பினும், பெரும்பாலான நிறுனங்கள் திறமையான நிலை தொழில்களுக்கு ஆட்களை பணியமர்த்தும் போது முறையான தகுதிகளைப் பார்ப்பதில்லை.
- நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக தொழிலாளர்களைத் தக்கவைப்பதில் சிக்கல் உள்ளது, ஏனெனில் அவர்கள் நியாயமான ஊதியத்திற்கு பணம் செலுத்தும் தொழில்தருனர்களை கண்டுபிடிப்பதற்கு முயலுகின்றனர். பாதை அபிவிருத்தி துறையோடு ஒப்பிடுகையில் கட்டிட நிர்மாணிப்புத்துறையையே இதனால் அதிகம் பாதிக்கின்றது.
- தொழிலாளர் சந்தையில் புதிய பொறியிலாளர்கள் போதுமான எண்ணிக்கையில் இருந்தாலும், அனுபவமுள்ள பட்டய சிவில் பொறியியலாளர்களுடன் ஒப்பிடும் போது இயந்திரவியல் மற்றும் மின்சாரத்துறைகளில் பட்டய பொறியியலாளர்களின் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவில் உள்ளது.
- தொழில்நுட்ப அலுவலர்களின் பிரிவுகளில் தற்போதுள்ள பற்றாக்குறைக்கான காரணம் அவர்களில் பெரும்பாலானோர் நிலை தேசிய தொழில்சார் தகைமை ஆறு அல்லது ஏழில் தேர்ச்சிபெற முயற்சிப்பதால் ஆகும். எனவே அவர்கள் தொழிற்சந்தையில் தொழில்நுட்ப அலுவலர்களாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் கடமைபுரிகின்றனர்.
- இத்துறையை சார்ந்த தொழில்கள் பெரும்பாலும் பாரம்பரியமாக காணப்படுவதால் கிராமப்புறங்களிலேயே பணிபுரியும் போக்கு காணப்படுகின்றது.
- இளைய தலைமுறையின் திறவாண்மை தொழில்களில் ஈடுபடாமல் அலுவலக தொழிலில் ஈடுபடவே விரும்புகின்றனர்.
- பெரும்பாலான தொழிலாளர்கள் எதிர்பார்த்த அளவு திறன்களை அடையாமல் தற்காலிகமாக வேலை செய்வதால் நிர்மாணிப்புத் திட்டங்களில் பணியின் தரம் பாதிக்கப்படும்.
- கொரோனா தொற்றுநோய் காலத்தில் வகுப்பறை கற்கை நிலையங்களைவிடவும் ஒன்லைன் முறைகளில் பெரும்பாலான பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றதால் எதிர்காலத்தில் வரைவாளர்களின் திறன் பற்றாக்குறை ஏற்படக்கூடும்.

நிர்மாணிப்புத்துறையின் தற்போதைய பிரச்சினைகளை சமாளிப்பதற்கான பரிந்துரைகள் :

- நிர்மாணிப்புத்துறையின் கீழ்மட்ட வேலைகளை அங்கீகரிக்கும் திட்டத்தை, நிர்மாணிப்பு கைத்தொழிற்துறை அபிவிருத்தி அதிகாரசபை ஒரு தகுதி மதிப்பீட்டின் அடைப்படையில் அடையாள இலக்கங்களை வழங்குவதைத தொடர வேண்டும்.
- இத்துறையை மேலும் ஈர்க்கும் வகையில் 'தொழிலின்போதான பயிற்சிநெறிக்கான'' வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும்.
- திறவாண்மையுள்ள அல்லது திறவாண்மையற்ற தொழிலாளர்களுக்கு 'நெகிழ்ச்சியான பணிபுரியும் நேரத்தை' ஒரு அறிமுகப்படுத்த வேண்டும். எட்டு மணிநேரவேலை என்ற பாரம்பரிய வேலை மாதிரியைப் பயன்படுத்துவதை விட Z-Generation I ஈர்ப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.
- கல்வி அமைச்சினால் 2019 ஆம் ஆண்டு முதல் சாதாரண தரத்தில் இடைவிலகிய மாணவர்கள் மற்றும் உயர்தரம் செய்ய விரும்பமில்லாத மாணவர்களுக்காக ஒரு தொழிற்கல்வி நெறியை தற்போது நாடளாவிய ரீதியில் சுமார் 400 பாடசாலைகளால் நடைமுறைப்படுத்தப்படுத்தி வருகின்றது. எனவே தேசிய கொள்கையாக எஞ்சியுள்ள பாடசாலைகளுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.
- பாடசாலையை விட்டு இடைவிலகியவர்களுக்கு சரியான தொழில்பாதையைத் தேர்ந்ததெடுப்பதற்கு முறையான தொழில் வழிகாட்டல் அமைப்பு இருக்க வேண்டும்.
- தொழிலாளர்களுக்கு அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கு முன் கற்றல் அமைப்புடன் தொடர்புடைய தொழிலாளர்களுக்கு அதிக விழிப்புணர்வு செய்யப்பட வேண்டும்.
- கவனம் செலுத்தும் பகுதிக்கு ஏற்ப சில பயிற்சி வகுப்புகளை பிரிக்க வேண்டும். (உதா: டைல் அடுக்கபவருக்கு முழுமையான மேசன் கல்வி அவசியமில்லை.)
- சில புதிய தொழில்நுட்ப பயிற்சி மையங்களை தேவையான மனிதசக்தியுடன் தேவையான இடங்களுக்க மாற்றுதல்.
- இளைஞர்களைக் கவரும் வகையில் நிர்மாணத்துறையில் புதிய இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டியது அவசியம்.

எதிர்காலத்தில் நிர்மானிப்புத்துறையில் இருந்து அழிக்கப்படும் வேலைகள் அல்லது துறைகள்:

- இந்தப் பணியின் அளவு குறைவாலும், பாதுகாப்பு விடயங்களில் அதிகாரிகளின் தரம் குறைவாக இருப்பதாலும், பாதுகாப்பு அதிகாரி பணி எதிர்காலத்தில் காணாமல் போகும்.

எதிர்காலத்தில் நிர்மானிப்புத்துறையில் உருவாகப்படும் தொழில்கள் அல்லது துறைகள்:

- மொடியுளர் நிர்மாணிப்பு முறைகள் இலங்கையில் இத்துறையில் வரவிருக்கும் போக்குகளாக இருக்கும்.

5.3 பொதுத்துறையின் பதவியணிச் செயல்முறையப் மீளாய்வு செய்தல்

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் கீழ், அரச துறைக்கான பதவியணி ஆட்சேர்ப்புக்களை தற்காலிகமாக நிறுத்திவைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அரசதுறையில் பணியாளர்கள் உபரியாக இருந்தலும், குறிப்பிட்ட பிரிவுகளில் பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 12.09.2022 அன்று வழங்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் முழு அரச துறையில் ஆட்சேர்ப்பு செயல்முறையை மீளாய்வு செய்யவும், அரச சேவையில் தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தகுந்த பரிந்துரைகளை முன்வைக்கவும் அத்தியாவசிய ஆட்சேர்ப்புகள் தொடர்பான முன்னுரிமைகளை அடையாளம் காணவும் ஆறு பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது. இவர்கள் அரச சேவையை இன்னும் திறமையாகவும், திறம்படவும் தொடர்வதற்கான காலக்கெடுவை உருவாக்கி பரிந்துரைகளை வழங்குதல் வேண்டும். 07.10.2022 அன்று கௌரவ பிரதம மந்திரியின் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற மேற்படி குழுவின் முதலாவது கூட்டத்தில் முழு அரச துறையின் பணியாளர் விபரங்களையும் கூடிய விரைவில் சேகரிக்க முடிவுசெய்யப்பட்டது.

பொது நிர்வாகம், உள் விவகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், திரு.எம்.எம்.பி.கே.மாயதுன்ன அவர்களினால் முன்மொழியப்பட்ட ஒரு முன்முயற்சியாக, அரசதுறை வேலைவாய்ப்பை பகுப்பாய்வு செய்வதற்கான ஒரு ஆய்வை மேற்கொள்ள வேண்டிய நேரம் இதுவாகும். இதைக் கருத்தில்கொண்டு, அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் பணியாளர் விபரங்களை சேகரிக்கும் பணி தேசிய மனிதவள அபிருத்தி ஆணைக்குழுவுக்கு ஒதுக்கப்பட்டதுடன் தேவையான மாதிரி வடிவங்களை உருவாக்கி இந்த ஆய்வை மேற்கொள்ள தேசிய மனிதவள அபிவிருத்தி ஆணைக்குழுவின் நிர்வாகக் குழுவால் ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டது,

இந்த நிபுணர் குழு கீழ்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியுள்ளது;

1. திருமதி.திலகா ஜயசுந்தர, செயலாளர், கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு (தலைவர்)
2. பொது நிர்வாகம், உள் விவகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நிமிக்கப்பட்ட பிரதிநிதி
3. கல்வி அமைச்சின் பிரதிநிதி
4. திரு.ருச்சிக் அமரசேகர, தலைவர், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
5. டாக்டர்.கே.ஏ.லலிததீர, பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு
6. டாக்டர்.ரன்மலி பெரேரா, பெற்றோலிய நிபுணர்
7. திருமதி.ஜே.ஏ.சீ.பி.ஜயசிங்க, பணிப்பாளர் (அணவல்) தேசிய மனிதவள அபிருத்திச் சபை

அரச நிறுவனங்களின் தொழில்முயற்சிகளிலிருந்து பெறப்பட்ட அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் படி, பணியணியை ஆய்வு செய்த பிறகு, அது ஒரு சுருக்கமான அறிக்கையை வரிசை அமைச்சுக்கு சமர்ப்பிக்கும் என எதிர்பாரக்கப்படுகின்றது.

5.4 ரக்கியா அருண நிகழ்ச்சித்திட்டம் - 2022

தேசிய மனிதவள அபிருத்திச் சபை தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் நான்கு ரக்கிய அருண நிகழ்ச்சதித்திட்டங்கை நடாத்தியது.

ரக்கியா அருண நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள்:

- பள்ளிப் படிப்பை முடித்தவர்கள், பட்டதாரிகள் மற்றும் வேலை தேடுபவர்களுக்கு தொழில்கள்/ நிறுவனங்களில் கிடைக்கும் வேலை வாய்ப்புகள் மற்றும் அரச தனியார் பயிற்சி நிறுவனங்ளில் உள்ள திறன் பயிற்சி வகுப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தல்.
- இடைநிற்றல் இளைஞர்களுக்கு தங்களை அறிமுகம் செய்துகொள்ள தொழில்தருனர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குதல்.
- தொழில்வாய்ப்புகளைத் தேடும் வேலை தேடுபவர்களுடன் தொடர்பு கொள்ள ஒரு தளத்தை தொழில்தருனர்களுக்கு வழங்கல்.

கம்பஹா மாவட்டத்தின் பாடசாலைகளை விட்டுவெளியேறுபவர்கள் மற்றும் வேலைதேடுபவர்களை இலக்காக் கொண்டு ரெக்கிய அருண நிகழ்ச்திட்டத்தை நடாத்த திட்டமிடப்பட்டது. இந்த வேலைத்திட்டத்தை அறிந்து கொள்வதற்காக மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுடன் ஆரம்ப கூட்டங்கள் நடாத்தப்பட்டு ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டது. பிரதேச செயலகங்களிலுள்ள கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் உதவிகள் வழங்கப்பட்டன.

கம்பஹா மாவட்ட செயலகம், மனிதவலு மற்றும் வேலைவாய்பு திணைக்களம், திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு, தேசிய வர்த்தக சம்மேளனம், அரச மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் முதலாவது ரக்கியா அருண நிகழ்ச்சி 2022 ஜுன் 30ஆம் திகதி நீர்கொழும்பு மாநகரசபையின கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.

திருமதி.ஜே.ஏ.சி.பி.ஜயசிங்க (தேசிய மனிதவள அபிவிருத்திசபையின யின் பணிப்பாளர் - பதில்கடமை) கூட்டத்தில் உரையாற்றியதுடன், இந்த தேசிய பணியின் நோக்கங்கள் மற்றும் இலங்கையின் முன்னணி தொழிற்துறைகளின் திறன் இடைவெளி மற்றும் வேலைவாய்ப்புகள்

குறித்து விளக்கினார். நகரசபை ஆணையாளர் தேசிய மனிதவள அபிவிருத்திசபையின் நாடு தழுவிய முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நீர்கொழும்பு, மினுவாங்கொட, கந்தான, கம்பஹா, வத்தளை, மஹர மற்றும் ஜ-எல ஆகிய பிரதேச பிரிவுகளைச் சேர்ந்த இளைஞர்கள் கலந்துகொண்டனர். தேசிய மனிதவள அபிவிருத்திசபையானது அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், தொழில்தருனர் மற்றும் வேலை தேடுபவர்களிடையே தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், அவர்கள் இருக்கும் தொழில் வாய்ப்புகளை ஒரே இடத்தில் வெளிப்படுத்துவதற்கும் ஒரு தளத்தை உருவாக்கியது. மேலும், தேசிய மனிதவள அபிவிருத்திசபையானது ஒருங்கிணைந்த உள்ளூர் பயிற்சி வாய்ப்புகள் மற்றும் தொழில் வழிகாட்டுதல் தகவல்களை எளிதாக்கியது. மேலும் இளைஞர்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையே சிறந்த தொடர்புகளை உருவாக்குவதற்கான வாய்ப்பை வழங்குகின்றது.

திருமதி.ஹிஷாந்தி, உதவி இயக்குனர் (மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழு) அவர்கள் நாடாத்தும் தொழிற்பயிற்சி வகுப்புகளின் முக்கியத்துவம் மற்றும் தொழிலாளர் சந்தையில் அவற்றுக்கான தேவை மற்றும் தொழிற்பயிற்சி துறையினால் வழங்கப்படும் தேசியதொழிற்பயிற்சி தரச்சான்றிதல்களின் முக்கியத்துவம் ஆகியவற்றை விளக்கினார்.
இந்த நிகழ்வில் பல்வேறு இலக்கு குழுக்களுடன் சுமார் 150 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். பத்து தனியார் நிறுவனங்களும் VTA, NYSC, SLITHM, Don Bosco Training Centre and Nenasala Training Centre போன்ற ஐந்து பயிற்சி நிறுவனங்களும் கலந்து கொண்டன. Dialog, Hayles Eco, Richard Pieris Distribution Centre, Keells Distribution Centre, Cargills, Tropical Findings, Agro Venture, GPV Lanka Pvt Ltd, Startek.inc மற்றும் Softlogic Holdings நிறுவனங்களின் மனிதவள முகாமையாளர்கள் இந்த நிகழ்வில் நன்மைகளைப் பெற்றனர். 25 இளைஞர்யுவதிகள் அவர்களுக்கான தொழில்வாய்பை பெற்றுக்கொண்டதுடன் மேலும் 25 பாடசாலைப் படிப்பை முடித்தவர்கள் தொழில்பயிற்சி வகுப்புகளைப் பின்பற்ற பயிற்சி நிறுவனங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்டனர்.

இரண்டாவது ரெக்கியா அருண நிகழ்ச்சி 13 ஒக்டோபர் 2022 ஆம் திகதி களுத்துறை மாநகர சபையின் கேட்போர் கூடத்தில் களுத்துரை மாவட்ட செயலாளர் மற்றும் களுத்துறை பிரதேச செயலாளர்களின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்டது. சுமார் 310 இளைஞர்கள், 16 தனியார் நிறுவனங்கள் அதாவது, Union Assurance, Janashakthi Insurance, Ceylinco Life, AIA Insurance, Keells, SPAR SL, Richard Pieris Company, Diamond Cutters, Econopack Pvt Ltd, Aitken Spence, Dasma International, Voice-D etc. போன்ற நிறுவனங்களும், தொழிற் பயிற்சி அதிகாரசபையினரும் பங்குபற்றினர். திரு.சி.எஸ்.லொக்குஹெட்டி, தலைவர், தேசிய மனிதவள அபிருத்தி அதிகாரசபை கூட்டத்தில் ஆரம்ப உரையையாற்றினர் மற்றும் தொழில் ஊக்குவிப்பு உரையை தனலக்ஷ்மி (முகாமையாளர் - மனிவளம், VFS Global Pvt Ltd) வழங்கினார்,

களுத்துறை மாநகர சபையின் மேயர் திரு நஸீர் அவர்களும் கலந்து கொண்டு இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் இந்நிகழ்ச்சியைப் பாராட்டினார். இளைஞர் யுவதிகள் 48 வேலைவாய்ப்பைத் பெற்றுக்கொண்டதுடன் மேலும் பாடசாலைப் படிப்பை முடித்த 24 இளைஞர்- யுவதிகள் தொழில்பயிற்சி பாடநெறிகளைப் பின்பற்ற தொழிற் பயிற்சி அதிகாரசபையின் கீழ் யின் கீழ் பதிவுசெய்யப்பட்டனர்.

மூன்றாவது ரெக்கியா அருண நிகழ்ச்சி 29 ஆந் திகதி நவம்பர் 2022ஆம் திகதி குருநாகலை பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்டது. குருநாகல் மாவட்ட செயலகத்தின் பிரதிச் செயலளார் இந்த நிகழ்வில் பங்குபற்றினார். திரு. தனுக சிறிமான, ஊக்குவிப்பு பேச்சாரளர், பங்குபற்றிய இளைஞர் - யுவதிகளுக்கு தமது வாழ்க்கையை தொழிற்பயிற்சியினூடாக வடிவமைப்பது எவ்வாறு என்பது தொடர்பாக உரையாற்றினார். சுமார் 620 இளைஞர் - யுவதிகள் பங்குபற்றியதுடன், 17 தனியார் நிறுவனங்கள இந்நிகழ்வில் பங்குபற்றின. அதாவது, Selyn Exporters, Trendywear, Certis Lanka, Ceylinco General Insurance, Laugfs Eco Sri Lanka, Sri Lanka Insurance, Sanasa Life Bank, DIMO, Voice-D, GSS International Pvt Ltd, Cargills, MAS, Allianz Life, Fair Max, Keells, Sri Lankan Air Force and LOLC and 13 VTA, NAITA, NYSC, SLITHM, Vocational Training Institute of Tourism, Siyasi Academy, New Nursing School, Lanka Nursing School, NIBM, CIPM, DTET and Job Net இந்த நிகழ்வில் பங்குபற்றின. இந்நிகழ்வில் சுமார் 81 இளைஞர் யுவதிகள் தமக்கான தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொண்டதுடன் 167 பாடசாலைப் படிப்பை முடித்தவர்கள் தொழில்பயிற்சி பாடநெறிகளை பின்பற்ற தனியார் மற்றும் அரச தொழிற்பயிற்சி நிறுவனங்களில் தம்மை பதிவுசெய்யப்பட்டனர்.

நான்காவது ரெக்கிய அருண நிகழ்ச்சியான "Career Infix 22" ருஹுணு பல்கலைக்கத்தின் 'Career Circle' உடன் இணைந்து நடாத்தப்பட்டது. கல்வி மற்றும் தொழில் கண்காட்சி என்பது ருஹுணு பல்கலைக்கழகத்தின் தொழில் வட்டம் தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் ஒத்துழைப்புடன் நடாத்தப்படும் மிக முக்கியமான திட்டங்களில் ஒன்றாகும், இதன் முக்கிய நோக்கம் கூட்டிணைந்த துறையில் தற்போதுள்ள வேலைவாய்ப்புகள், பயிற்சி மற்றும் உள்ளுறை பயிற்சிகள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், 21ஆம் நூற்றாண்டின் கூட்டிணைந்த உலகத்தால் விரும்பப்படும் திறன்கள் மற்றும் தகுதிகளை வளர்க்க அவர்களுடன் தொடர்புகளை மேம்படுத்தல் ஆகும்.

இந்த தொழில் சந்தையானது இளைஞர் யுவதிகளை நேரடியாகவும் மற்றும் நேரலை ஊடாகவும் இணைத்தது. இந்நிகழ்வு 10 ஆம் திகதி முதல் – 14 திகதி டிசம்பர் 2022 வரை ருஹுணு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தினால் நடாத்தப்பட்டது.

ஊக்கமளிக்கும் பேச்சாளரான திரு தனுக சிறினாம, இளங்கலை பட்டதாரிகள் மற்றும் தேசிய மற்றும் சர்வதேசிய தனியார் நிறுவனங்களான பயிற்சிகளை பெற விரும்பும் மாணவர்களுக்கான தொழில் ஊக்குவிப்பு அமர்வை வழங்கினார். சுமார் 380 இளைஞர் யுவதிகள் பங்குபற்றியதுடன்,

17 தனியார் நிறுவனங்கள் பங்குபற்றின. மேலும் 25 பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைத்ததுடன் 11 மாணவர்கள் தனியார் தொழிற்துறை பயிற்சி நிறுவனங்களில் கீழ் பதிவுசெய்யப்பட்டனர். இதில் 99x Technology, Freelan Enterprises (pvt) Ltd, Creative Software, Unichela Koggala, Sampath Bank, AIA, Edu One, Careers360.lk, ICBT, SLIM, SLIT, Cloud Ecommerle Accounts என்பன பங்குபற்றின.

நடாத்தப்பட்ட ரக்கியா அருண நிகழ்ச்சித்திட்டத்தின் சுருக்கம்:

இல.	மாவட்டம்	திகதி	பங்குபற்றுவர்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய கம்பனிகள் / நிறுவனங்களின் எண்ணிக்கை	பெறப்பட்ட தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கை	பயிற்சி நிறுவனங்களில் பதிவுசெய்த பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை
1	கம்பஹா	30.06.2022	130	15	12	25
2	களுத்துறை	13.10.2022	310	14	48	24
3	குருநாகல்	29.11.2022	620	27	81	167
4	மாத்தறை	14.12.2022	280	17	25	11
	மொத்தம்		**1340**		**166**	**227**

ராக்கிய அருணா நிகழ்ச்சியின் சிறப்பம்சங்கள்:



நீர்கொழும்பு நிகழ்ச்சி - 30.06.2022



களுத்துறை நிகழ்ச்சி -13.10.2022

5.5 தேசிய மற்றும் துணை தேசிய மட்டங்களின் மனிதவள அபிவிருத்தி நிலையை அளவிடுவதற்கான ஒரு பயனுள்ள வழிமுறை

மனிதவள அபிவிருத்திக் குறியீடு (HDI), மனித மூலதனச் சுட்டெண் (HCI) போன்ற தேசிய அளவில் மனிதவள நிலை குறித்த சில யோசனைகளைப் பெறுவதற்கு சில குறியீடுகள் காணப்பட்டாலும், இந்தக் குறியீடுகள் துணை தேசிய மட்டத்தில் கணக்கிடுவதற்கான தரவு இல்லாதததால், மனிதவள அபிவிருத்தி நிலையை அளவிடுதவற்கு பயன்படுத்தப்படவில்லை. மேலும், தற்போது இலங்கையில் துணை தேசிய மட்டங்களின் மனித அபிவிருத்தியை அளவிடுவதற்கு சுட்டெண் எதுவும் உருவாக்கப்படவில்லை. எனவே மனிதவள அபிவிருத்தி தொடர்பான இலங்கையின் உச்சக் கொள்கையை உருவாக்கும் அமைப்பாக மேற்கூறிய விடயங்களைக் கருத்தில் கொண்டு தேசிய மனிதவள அபிவிருத்திச் சபை தேசிய அளவில் மற்றும் துணை தேசிய நிலைகளில் மனிதவள அபிவிருத்தி நிலையை அளவிடுவதற்கு பயனுள்ள பொறிமுறையை வகுப்பதன் அவசியத்தையும் சாத்தியத்தையும் ஆராய்வதற்கான ஒரு நடவடிக்கையை எடுத்துள்ளது. மேலும், முடிவெடுக்கும் நபர்களுக்கு வளங்களை திறம்பட பயன்படுத்தவும் ஒதுக்கவும் இத்தகைய வழிமுறை மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.


இந்தப் பணியைச் செய்யும் பொது நிர்வாக அமைச்சு, கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு, தொழில் அமைச்சு, குடித்தொகை மற்றும் புள்ளிவிபர அமைச்சு, தேசிய திட்டமிடல் திணைக்களம், மத்திய வங்கி, பல்கலைக்கழக மாணியம், மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு, ஆளணி முகாமைத்துவதற்திற்கான பட்டய நிறுவனம், தெற்கு மாகாண சபை, தேசிய மனிதவள அபிவிருத்தி சபை, ஐக்கிய தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் சிரேஸ்ட பேராசிரியர் ஆகியவர்களை உள்ளடக்கி ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பேராசிரியர் காமினி த அல்விஸ் தலைமையில் இந்தக் குழுவினால் ஏழு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. மாவட்ட அளவில் மனிதவள அபிவிருத்திக் குறியீட்டை உருவாக்குவதற்கு கீழே குறிப்பிடப்பட்டள்ள மூன்று முக்கிய பரிமாணங்களை குழு அடையாளம் கண்டுள்ளது. மேலும், ஒவ்வொரு பரிமாணத்தின் கீழும் தொடர்புடைய குறிகாட்டிகள் கிடைக்கக்கூடிய இரண்டாம் நிலை தரவு மூலங்களைப் பயன்படுத்தி அடையாளம் காணப்பட்டன.

1. நீண்ட மற்றும் நலமான வாழ்க்கை மற்றும் பராமரிப்பு (LHLC)
2. அறிவு மற்றும் திறன்கள் (KS)
3. ஒரு ஒழுக்கமான வாழ்க்கைகத் தரம் மற்றும் வேலைவாய்ப்பு (DSLE)

பின்னர், மனிதவள அபிவிருத்தி சுட்டெண் முப்பத்தியொரு குறிகாட்டிகளைப் பயன்படுத்தி தொகுக்கப்படுகின்றது. அவை முப்பரிமாணங்களின் அடிப்படையில் மூன்று துணைக் குறியீடுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அனைத்து துணை குறிகாட்டிகளும் மனிதவள அபிவிருத்திக் குறியீட்டில் சம எடைகளைக் கொண்டுள்ளன. நீண்ட ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் பராமரிப்பு துணைக் குறியீடு எட்டு குறிகாட்டிகளைப் பயன்படுத்தி தொகுக்கப்பட்டுள்ளது. அறிவு மற்றும் திறன்கள் துணைக் குறியீட்டை தொகுக்கும் போது, ஒன்பது குறிகாட்டிகள்

கருதப்பட்டன. மேலும், ஒழுக்கமான வாழ்க்கை மற்றும் தொழில்வாய்ப்பு துணைக் குறியீடு முறையே பதினான்கு குறிகாட்டிகளை உள்ளடக்கியது. மேலும், மூன்று துணைக் குறியீடுகளும் ஒவ்வொரு பரிமாணத்திலும் சாதாரணப்படுத்தப்பட்ட காட்டி மதிப்புகளின் எண்கணித சாராசரியை எடுத்து தொகுக்கப்பட்டுள்ளன.


அதன் பிறகு, Z-Score அளவிடுதல் மற்றும் Min-Max அளவிடுதல் அணுகுமுறைகள் நான்கு வகையான முறைகளின் கீழ் குறிகாட்டிகளின் மதிப்புகளை இயல்பாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டன. மேலும், மனிதவள குறிகாட்டிகள் மற்றும் உட்கட்டமைப்பு தொடர்பான குறிகாட்டிகள் உட்பட Min-Max அளவிடுதல் அணுகுமுறையைப் பின்பற்றும் சிறந்த முறை தேரந்தெடுக்கப்பட்டது. பின்னர், 2021ஆம் ஆண்டின் தரவை அடிப்படை ஆண்டாகக் கருத்தில் கொண்டு 25 மாவட்டங்களில் Min-Max அளவிடுதல் அணுகுமுறையைப் பயன்படுத்தி தரவை இயல்பாக்குவதன் மூலம் அனைத்து குறிகாட்டிகளும் பொதுவான அளவாக மாற்றப்படுகின்றன. மாவட்ட வாரியான மனிதவள அபிவிருத்திச் சுட்டெண் ஆனது சம எடையைக் கருதி மூன்ற துணைக் குறியீடுகளின் எண்ணித சராசரியை எடுத்து தொகுக்கப்பட்டது. இறுதியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் 2021ஆம் ஆண்டின் மத்திய ஆண்டு மக்கள் தொகையை எடைபோட்டு, அனைத்து மாவட்ட வாரியான மனிதவள அபிவிருத்திச் சுட்டெண்களின் சராசரியை எடுத்தக்கொண்டு தேசிய மனிதவளக் குறியீடு கணக்கிடப்பட்டது.



உரு 1: 2022ஆம் ஆண்டுக்கான மாவட்ட மற்றும் தேசிய மட்ட மனிதவள அபிவிருத்திச் சுட்டெண் பெறுமதி (2021ஆம் ஆண்டு தரவின் அடிப்படையில்)

மூலம்: தேசிய மனிதவள அபிவிருத்தி சபையினால் அபிவிருத்தி செய்யப்பட்டது, 2022

மேலே உள்ள உரு 1இன் படி, கொழும்பு, கம்பஹா மற்றும் கண்டி மாவட்டங்களின் மனிதவள அபிவிருத்தி சுட்டெண் முறையே 2021ஆம் ஆண்டுக்கான இலங்கையின் மற்ற மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது மிக உயர்ந்த மதிப்புகளாக காட்டப்பட்டுள்ளன. மேலும், மொனராகலை, பொலொன்னறுகை மற்றும் பதுளை மாவட்டங்கள் முறையே மிகக்குறைந்த மனிதவள அபிவிருத்தி சுட்டெண்ணைக் கொண்டுள்ளன. இலங்கையின் தேசிய அளவிலான மனிதவள அபிவிருத்தித் திட்டத்துடன் ஒப்பிடும் போது கொழும்பு, கம்பஹா, கண்டி, கேகாலை, களுத்துறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் மட்டுமே மனிதவள அபிவிருத்தி சுட்டெண்ணுக்கு மேல் உள்ளன.



உரு 2: 2022ஆம் ஆண்டுக்கான இலங்கைக்கான மனிதவள அபிவிருத்திச் சுட்டெண் வரைபடம் (2021ஆம் ஆண்டு தரவின் அடிப்படையில்)

மூலம்: தேசிய மனிதவள அபிவிருத்தி சபையினால் அபிவிருத்தி செய்யப்பட்டது, 2022

உரு 2இன் படி, கொழும்பு மாவட்டம் மிக உயர்நத மனிதவள அபிவிருத்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தவதை தெளிவாகக் காணலாம். (HRDI வீச்சு 0.669 – 0.741க்குள்), கம்பஹா மாவட்டம் 2வது உயர்நத மனிதவள அபிவிருத்தியைப் (HRDI வீச்சு 0.524 – 0.669க்குள்), பிரதிநிதித்துவப்படுத்துவதை காண முடியும். களுத்துறை, கேகாலை, கண்டி, யாழ்ப்பாணம் மற்றும் அம்பாறை மாவட்டங்கள் மனிதவள அபிவிருத்தியில் (HRDI வீச்சு 0.452 – 0.524க்குள்), 3வது மட்டத்தில் உள்ளன. இறுதியாக முல்லைத்தீவு, புத்தளம், அனுராதபுரம், பொலநருவை, மட்டக்களப்பு, நுவரெலியா, இரத்தினபுரி, பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்கள் நாட்டின் குறைந்த மனிதவள அபிவிருத்தியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

5.6 தேசிய மனிதவள அபிவிருத்திக் கொள்கையை உருவாக்கல் (NHRDP) ஒவ்வொரு தூணிலு குறுக்குவெட்டுப் பகுதிகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

1997 ஆண்டின் 18 இலக்க தேசிய மனித வள அபிவிருத்தி சபை சட்டத்தின் 14(i) பிரிவுக்கு அமைய, தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி தொடர்பாக துறைசார் மனித வள அபிவிருத்தி அல்லது அது தொடர்பான, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பாவித்தல், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், பாதிக்கப்படக்கூடிய குழு நபர்களின் சமூகப் பாதுகாப்பை திட்டமிடுதல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பில் உரிமைகளை பேணிவருதல், தேசிய மனித வளக் கொள்கை தொடர்பாக தர்க்க ரீதியாக விளக்கமளித்தல் அடங்கலாக தொடர்புடைய அனைத்து துறைகளிலும் ஆலோசனை வழங்குதல் சபையின் கடமை மற்றும் பொறுப்பாகும்.

அரசின் புதிய நோக்குக்கு அமைய உள்ளடங்கும் விடயப் பரப்புக்கு அமைய, ‘‘சுபீட்சத்தின் நோக்கு’’ வகுக்கப்பட்ட தேசிய மனித வள அபிவிருத்திக் கொள்கையை வகுத்தல் உடனடித் தேவையாகும். அதற்கமைய, ‘‘சுபீட்சத்தின் நோக்கு’’ கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய பத்துப் பிரதான கொள்கைகளுக்கான பொறுப்பான அனைத்து நிறுவனங்களினதும் அங்கீகாரத்துடன் தனது கொள்கையை தயாரிக்கும் செயற்பாட்டில் தேசிய மனித வள அபிவிருத்தி சபை ஈடுபட்டுள்ளது.

தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் இலக்கு / குறிக்கோள்

தொழில்வாய்ப்பு

1. இலங்கையிலுள்ள அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கு முழுமையான, பயனுள்ள மற்றும் சுதந்திரமாகத் தெரிவு செய்யும் தொழில் பெறுதலை மேம்படுத்துதல்.
2. தனிநபர் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள சனத்தொகையை குறைப்பதன் ஊடாக வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்.
3. பேதங்கள் இன்றி அனைத்து ஊழியர்களுக்கும் இயன்றளவு உயர்ந்த பட்ச தொழில்வாய்ப்புகளை வழங்குதல்.

கல்வி மற்றும் பயிற்சி

1. உயர் திறமையுள்ள, உலகளாவிய ரீதியான போட்டித்தன்மையான, பல் திறன் மற்றும் வினைத்திறனான ஊழியப் படையை அபிவிருத்தி செய்தல்.
2. ஊழலற்ற, ஆன்மீக மேம்பாடு, சுற்றாடல் நேயம் மற்றும் ஒழுக்கநெறி மிக்க சமூகத்தை உருவாக்குதல்.
3. பாதிப்பு ஏற்படுத்தும் போதைப்பொருளில் இருந்து சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை பாதுகாப்பதற்காக உரிய கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு பொறிமுறையை உறுதி செய்தல்.

மக்கள் - மைய பொருளாதாரம்

1. சமகால மற்றும் எதிர்கால தலைமுறையின் நலனுக்காக பொருளாதார அபிவிருத்தியின் முழுமையான அணுகுமுறையை உருவாக்குதல்.
2. பொருளாதாரக் கொள்கைகளை விரைவாக அமுலாக்குவதன் ஊடாக வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம்

1. தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தை நோக்கி இலங்கையின் மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்தல்.
2. பாதிக்கக்கூடிய மற்றும் எல்லை சமூகங்களுக்கான இலத்திரணியல் சேவை வழங்குவதனை உறுதிப்படுத்தல்.
3. அதிக உற்பத்தித்திறனுக்கான அறிவுசார் சொத்துரிமைகளை புதுமை மற்றும் பயன்படுத்துவதற்கான கலாச்சாரத்தை உருவாக்குதல்.

.

தேசிய மனித வள அபிவிருத்தித் திட்டத்தின் உத்தேச நான்கு தூண்கள்

1. தொழில்வாய்ப்பு
2. கல்வி மற்றும் பயிற்சி
3. மக்கள் மைய பொருளாதாரம்
4. விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம்


ஒவ்வொரு தூணிலும் குறுக்குவெட்டுப் பகுதிகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

- மாற்றுத் திறனாளிகள்
- பாலினப் பாகுபாடு
- குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள்
- நலிவுற்ற குழுக்கள்
- இலஞ்சம் மற்றும் ஊழல்

தேசிய மனிதவள அபிவிருத்திச் சபை ஏற்கனவே ஒரு ஆலோசனைக் குழுவையும், சம்பந்தப்பட்ட துறைகளில் நிபுணத்துவத்தையும் கொண்ட ஒரு செயற்குழுவையும் பரிந்துரைத்துள்ளது. மேலும், இந்தக் குழுவின் மூலம் தேசிய மனிதவள அபிவிருத்திக் கொள்கையை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இந்தக் கொள்கைக்க அமைச்சரவை ஒப்புதல் கிடைத்த பிறகு, மனிதவள அபிவிருத்திக் கொள்கையை தேசிய மற்றும் துணை தேசிய அளவில் செயல்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த செயல்பாட்டில், ஆலோசனைக் குழு மூலம் இந்தக் கொள்கையை உருவாக்க முடிவு செய்தாலும், பொருளாதார நெருக்கடி காரணமாக, ஆலோசனை சேவையை கொள்முதல் செய்யும் நடவடிக்கையை நிறுத்த முடிவு செய்யப்பட்டது.

தேசிய மனித வள கொள்கைத் திட்டம் வரைபு

இந்தக் கொள்கைத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, தேசிய மனித வள அபிவிருத்தி சபை NHRDC சட்டத்தின் கீழ்வரும் நம்பகமான துறைகள், பேண்தகு அபிவிருத்தி இலக்குகள், தேசிய மனிதவளம் மற்றும் தொழில்வாய்ப்பு (NHR & E) கொள்கையின் ஐந்து தூண்கள் மற்றும் ‘‘சுபீட்சத்தின் நோக்கு’’ தேசிய கொள்கைப் பிரகடனத்தின் ஒன்பது தூண்களாக கருதப்படுகின்றன.



திட்டம் வரைபு


5.7 தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் புள்ளிவிபர சஞ்சிகை

தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் நோக்குக்கு அமைய, இலங்கையின் கல்வித் துறையுடன் தொடர்புடைய பங்குதாரர்களின் தகவல் இடைவெளியை நிரப்புவதற்காக வருடாந்த புள்ளிவிபர சஞ்சிகையை வெளியிடுவதற்கு தேசிய மனித வள அபிவிருத்தி சபை முகாமைத்துவம் தீர்மானித்தது. அது தொடர்பாக 2015 ஆம் ஆண்டிலிருந்து நான்கு சஞ்சிகைகள் வெளியிடப்பட்டுள்ளன. பிந்திய வெளியீடு 2022 ஆண்டு வெளியிடப்பட்டது.


அந்த வெளியீடுகளில் பொதுக் கல்வி, மூன்றாம் நிலை தொழிற்பயிற்சி மற்றும் உயர் கல்வித் துறை தொடர்பான முக்கியமான புள்ளிவிபரங்கள் அடங்கியுள்ளன. இணைய தளங்களில் உள்ள இரண்டாம் நிலை தரவு மூலங்கள், இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கைகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக புள்ளிவிபரங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அனைத்துத் தரவுகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. இலங்கையின் கல்வித் துறை தொடர்பில் அக்கறை கொண்டுள்ள ஆராய்ச்சியாளர்கள், கொள்கை வகுப்பாளர்களுக்கு அந்த சஞ்சிகைகளின் தரவுகள் பயனுள்ளதாக அமையும்.

6. தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் 2022 ஆண்டின் வெளியீடுகள்

2022 ஆண்டின் வெளியீடுகள், அறிக்கைகளின் படங்கள் கீழே காட்டப்படுகின்றன.



புள்ளிவிபர சஞ்சிகை -2022



அபிவிருத்தி அலுவலர் கற்கை

7. 31 டிசம்பர் 2022ஆம் திகதியன்று நிதியியல் நிலைமைக்கூற்று

7. 31 டிசம்பர் 2022ஆம் திகதியன்று நிதியியல் நிலைமைக்கூற்று

	குறிப்பு	2022		2021		மதிப்பீடு செய்யப்பட்டது
சொத்துகள்						
நடைமுறைச் சொத்துக்கள்						
காசு மற்றும் காசுக்கு சமனானவை	1	17,051,843.29		17,517,904.58		18,050,000.00
பெறுவனவுகள்	2	40,062.82		40,062.82		-
கையிருப்புகள்	3	1,977,506.51		1,080,696.56		2,000,000.00
முற்கொடுப்பனவுகள்	4	82,139.79		82,975.65		83,000.00
ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்	5	3,667,057.73		3,034,602.61		4,000,000.00
		22,818,610.14		**21,756,242.22**		**24,133,000.00**
நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை						
உட்கட்டமைப்பு, பொறி மற்றும் உபகரணங்கள்	6	9,064,226.10		8,412,437.23		8,000,000.00
வாகனங்கள்	6	23,849,189.33		-		24,000,000.00
மென்பொருள்		14,895.83		118,148.33		15,000.00
ஏனைய நிதியியல் சொத்துக்கள்	6	221,695.76		545,297.98		250,000.00
		33,150,007.02		9,075,883.54		32,265,000.00
மொத்தச் சொத்துகள்		**55,968,617.16**		**30,832,125.76**		**56,398,000.00**
பொறுப்புகள்						
நடைமுறைப் பொறுப்புகள்						
கொடுப்பனவுகள்	7	1,088,100.99		510,079.51		1,000,000.00
குறுகிய கால ஏற்பாடுகள்	8	40,062.82		396,642.82		40,062.82
		1,128,163.81		**906,722.33**		**1,040,062.82**
நடைமுறையல்லா பொறுப்புகள்						
ஊழியர் நன்மைகள்	9	4,181,542.50		3,870,402.50		4,200,000.00
		4,181,542.50		**3,870,402.50**		**4,200,000.00**
மொத்தப் பொறுப்புகள்		**5,309,706.31**		**4,777,124.83**		**5,240,062.82**
தேறிய சொத்துக்கள்		**50,658,910.85**		**26,055,000.93**		**51,157,937.18**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்குகள்						
கீழ்வருவனவற்றினால் மூலதனம் வழங்கப்பட்டது						
பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனம்		3,000,000.00		3,000,000.00		3,000,000.00
மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள்		34,700,042.90		13,490,249.80		35,000,000.00
பிற்போடப்பட்ட வருமானம் மானியம்		4,091,027.82		7,501,089.11		4,157,937.18
அரச நன்கொடைகள் - மூலதனம்		9,152,501.50		1,796,408.22		8,750,000.00
திரட்டப்பட்ட மிகை/(பற்றாக்குறை)		(284,661.37)		267,253.80		250,000.00
மொத்த தேறிய சொத்துகள் / உரிமைப் பங்குகள்		**50,658,910.85**		**26,055,000.93**		**51,157,937.18**

மேற்குறிப்பிட்ட நிதியியல் கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை அரசதுறைக்கான கணக்கியல் நியமங்களுடன் இணங்குகின்றது என சான்றுபடுத்துகின்றேன்.

சுஜீவ களுவாராச்சி
உதவிப் பணிப்பாளர் (நிதி)
திகதி :

ஜே.ஏ.சி.பீ. ஜயசிங்க
பணிப்பாளர (அனவல்)
திகதி :

கணக்கியல் கொள்கைகளும் பக்கம் 5 இருந்து 14 வரையுள்ள குறிப்புகள் நிதியியல் கூற்றுகளின் ஒன்றிணைந்த பகுதிகளாகும். இந்த நிதியியல் கூற்றுகளைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்குமான பொறுப்பு பணிப்பாளர் சபையினுடையதாகும். இந்த நிதியியல் கூற்றுகள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் சார்பாக கையொப்பமிடப்பட்டுள்ளது.

தலைவர் NHRDC
திகதி :

சபையின் அங்கத்தவர்
திகதி : 9/06/23

சபையின் அங்கத்தவர்
திகதி :

8. 31 டிசம்பர் 2022இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை கூற்று

இ.ரூபாவி

	குறிப்பு	2022		2021		மதிப்பீடு செய்யப்பட்டது
வருமானம்						
அரச மானியம் - மீண்டுவரும்	10	22,880,000.00		22,191,000.00		23,591,550.00
அரச மானியம் - அபிவிருத்தி நடவடிக்கைகள்	11	1,781,906.72		683,152.12		5,000,000.00
கடன்கரைப்பு	6	3,410,061.29		2,992,446.41		-
ஏனைய வருமானம்	13	312,133.74		198,765.44		
மொத்த வருமானம்		**28,384,101.75**		**26,065,363.97**		**28,591,550.00**
செலவுகள்						
கூலி, சம்பளம் மற்றும் ஊழியர் நன்மைகள்	14	17,354,503.93		16,278,480.34		17,154,970.00
மானியங்கள் மற்றும் ஏனைய பரிமாற்றல் கொடுப்பனவுகள்	15	1,781,906.72		683,152.12		4,340,000.00
வழங்கல் மற்றும் பயன்படுத்தப்பட்ட நுகர்வுகள்	16	(270,815.82)		177,239.24		642,070.00
தேய்வு மற்றும் தவணை முறைக் கடன் கரைப்பு செலவுகள்	6	3,410,061.29		2,992,446.41		2,500,000.00
பயணம், பிழைப்பூதியம், மற்றும் கொடுப்பனவுகள்	17	359,010.21		218,640.00		366,390.00
பயனபடுத்தல் மற்றும் சேவைகள்	18	3,569,341.87		3,038,405.43		3,974,860.00
பராமரிப்பு செலவுகள்	19	1,652,520.46		1,060,412.28		1,388,960.00
ஏனைய செலவுகள்	20	1,006,088.26		344,210.80		64,300.00
வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள் மீதான பற்றாக்குறை	12	72,400.00		78,400.00		-
மொத்தச் செலவுகள்		**28,935,016.92**		**24,871,386.62**		**30,431,550.00**
இந்த காலத்திற்கான மிகை/(பற்றாக்குறை)		**(550,915.17)**		**1,193,977.35**		**(1,840,000.00)**

9. 2022 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு மாற்றக்கூற்று

இ.ரூபாவில

	கட்டுப்படுத்தும் நிறுவனத்தின் உரிமையாளர்களுக்கு உடமையாக்கத்தக்கவை					
	பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனம்	மீள்மதிப்பிடப்பட்ட ஒதுக்கு	பிற்போடப்பட்ட மானிய வருமானம்	அரச மானியம் - மூலதனம்	திரட்டிய மிகை/(பற்றாக்குறை)	மொத்த தேறிய சொத்து / உரிமைப்பங்கு
01.01.2021 அன்று முன்கொண்டுவரப்பட்ட மீதி	3,000,000.00	13,490,249.80	10,073,045.52	-	729,557.59	27,292,852.91
முன்னைய வருட சீராக்கல்	-	-	-	-	(6,230.80)	(6,230.80)
- செலவு பதிவுசெய்தல் வழுக்கள்	-	-	-	-	-	-
- அபிவிருத்தி நடவடிக்கைகள்	-	-	-	1,650,050.34	(1,650,050.34)	-
- நிலையான சொத்துகளின் கொள்வனவு	-	-	1500.00	(1,500.00)	-	-
அரசாங்க மானியம்	-	-	-	1,250,000.00	-	1,250,000.00
இக்காலப் பகுதியின் அடையாளம் காணப்பட்ட மொத்த வருமானம் / செலவு	-	-	-	-	1,193,977.35	1,193,977.35
இந்தக் காலப்பகுதிக்கான மொத்தச் செலவு	-	-	418,990.00	(418,990.00)	-	-
அரசாங்க மானிய வருமானத்திற்கு மாற்றப்பட்டவை	-	-	-	(683,152.12)	-	(683,152.12)
கடன்கரைப்பு	-	-	(2,992,446.41)	-	-	(2,992,446.41)
முன் கொண்டு செல்லப்பட்ட 31 டிசம்பர் 2021 திகதியில் மீதி	**3,000,000.00**	**13,490,249.80**	**7,501,089.11**	**1,796,408.22**	**267,253.80**	**26,055,000.93**
01 ஜனவரி 2022 அன்று முன்கொண்டு செல்லப்பட்ட மீதி	3,000,000,.00	13,490,249.80	7,501,089.11	1,796,408.22	267,253.80	26,055,000.93
முன்னைய வருட சீராக்கல்கள்	-	-	-	-	(1,000.00)	-
அரசாங்க மானியம்	-	-	-	3,038,000.00	-	-
				6,100,000.00	-	-
இக்காலப்பகுதிக்கான மிகை/ பற்றாக்குறை	-	-	-		(550,915.17)	-
இந்தக் காலப்பகுதிக்கான மொத்தச் செலவு	-	-	-	-	-	-
அரசாங்க மானிய வருமானத்திற்கு மாற்றப்பட்டவை	-	-	-	(1,781,906.72)	-	-
கடன்கரைப்பு	-	-	(3,410,061.29)	-	-	-
முன் கொண்டு செல்லப்பட்ட 31 டிசம்பர் 2022 திகதியில் மீதி	**3,000,000.00**	**34,700,042.90**	**4,091,027.82**	**9,152,501.50**	**(284,661.37)**	**50,658,910.85**

10. காசுப் பாய்ச்சல் கூற்று

31 டிசம்பர் 2022ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான ஒன்றுதிரட்டிய காசுப் பாய்ச்சல் கூற்று

இ.ரூபாவில

தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்	2022		2021
முகை/(பற்றாக்குறை)	(550,915.17)		1,193,977.35
காசு அற்ற அசைவுகள்			
கடன்கரைப்பு	-		-
பணிக்கொடை செலவுகள்	485,380.00		573,990.00
ஊழியர் கடனுக்கான வட்டி	(145,467.49)		(128,273.77)
நுகர்வுக் களஞ்சிய அதிகரிப்புகள் (குறைவுகள்)	(896,809.95)		(292,559.90)
முற்கொடுப்பனவுகளில் அதிகரிப்புகள் (குறைவுகள்)	835.86		1,493.27
ஊழியர் கடன் அதிகரிப்புகள் (குறைவுகள்)	(635,980.12)		295,037.86
ஏனைய முற்கொடுப்பனவுகளின் அதிகரிப்புகள்(குறைவுகள்)	3,525.00		(10,001.02)
கொடுப்பனவுகளின் அதிகரிப்புகள் (குறைவுகள்)	578,021.48		(1,208,403.86)
சொத்துப் பதிவழிப்பு	569,973.01		-
மிகை ஏற்பாட்டுச் செலவுகள்	356,580.00		(53,527.78)
குறுகிய கால ஏற்பாடுகள	541,933.28		(105,455.12)
கொடுப்பனவு செய்யப்பட்ட பணிக்கொடை	(174,240.00)		(324,855.00)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	**132,835.90**		**(58,577.97)**
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்			
கணணிகள் கொள்வனவு	(19,000.00)		(28,750.00)
தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் கொள்வனவு	(431,610.00)		-
வாகனத் திருத்தங்கள்	(6,351,754.68)		-
ஏனைய சொத்துக்களின் கொள்வனவு	(42,000.00)		-
ஊழியர் கடன் மீதான வட்டி	145,467.49		128,273.77
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	**(6,698,897.19)**		**99,523.77**
நிதியியல் செயற்பாடுகளில் இருந்தன காசுப்பாய்ச்சல்			
நிதி நடவடிக்கைகயில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	-		-
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் அதிகரிப்பு / (குறைவு)	**(6,566,061.29)**		40,945.80
இக்காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை	**17,517,904.58**		17,476,958.78
இக்காலப்பகுதியின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை	**10,951,843.29**		17,517,904.58
காசுப் பாய்ச்சல் கூற்றின் குறிப்புகள்			
கையில் உள்ள காசு மற்றும் வங்கி மீதி			
இலங்கை வங்கிக் கணக்கு A/C 165197	17,022,181.47		16,997,730.13
மக்கள் வங்கிக் கணக்கு A/C No 119100120409161	29,661.82		520,174.45
சில்லறை காசு	-		-
	17,051,843.29		**17,517,904.58**

11. குறிப்புகள்

		2022		2021		மதிப்பீடுசெய்யப்பட்டது
காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்	**1**					
இலங்கை வங்கிக் கணக்கு 165197		17,022,181.47		16,997,730.13		18,000,000.00
மக்கள் வங்கிக் கணக்கு இலக்கம் 119100120409161		29,661.82		520,174.45		50,000.00
		17,051,843.29		**17,517,904.58**		**18,050,000.00**
கிடைப்பனவுகள்	**2**					
நிமல் போப்பகே (முன்னாள் தலைவர்)		40,062.82		40,062.82		-
		40,062.82		**40,062.82**		**-**
கையிருப்புகள்	**3**					
நுகர்வுக் களஞ்சியம்		1,977,506.51		1,080,696.56		2,000,000.00
		1,977,506.51		**1,080,696.56**		**2,000,000.00**
முற்கொடுப்பனவுகள்	**4**					
வாகனக் காப்புறுதி		82,139.79		82,975.65		83,000.00
		82,139.79		**82,975.65**		**83,000.00**
ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்	**5**					
ஊழியர் கடன் - இடர்		3,657,056.71		3,021,076.59		4,000,000.00
விழாக்கால முற்பணம்		10,001.02		10,001.02		-
சொத்துக் கொள்வனவில் இருந்து கிடைக்க வேண்டியவை		-		3,525.00		-
		3,667,057.73		**3,034,602.61**		**4,000,000.00**

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (குறிப்பு 06)

	தளபாடங்கள் மற்றும் பொருத்திகள்		அலுவலக உபகரணங்கள்		மின்சாரப் பொருத்திகள்		கணணி		மென் பொருள்		வாகனங்கள்		புத்தகங்கள்		ஏனைய சொத்துகள்		கட்டடம் மற்றும் கட்டமைப்பு	
அறிக்கையிடல் காலம 01.01.2022 to 31.12.2022	2022	2021	2022	2021	2022	2021	2022	2021	2022	2021	2022	2021	2022	2021	2022	2021	2022	2021
ஆரம்ப மீதி	4,884,257.49	4,884,257.49	3,156,548.80	3,156,548.80	14,579.00	14,579.00	5,698,339.72	5,669,589.72	1,189,566.61	1,189,566.61	15,007,442.85	15,007,442.85	118,524.54	118,524.54	1,103,102.30	1,103,102.30	6,531,265.68	6,531,265.68
சேர்த்தல்	431,610.00	-	-	-	-	-	19,000.00	28,750.00	-	-	6,351,754.68	-		-	42,000.00	-	-	-
சீராக்கல்	(43,738.40)	-	-	-	-	-	-	-	-	-	19,200,000.00	-	-	-	-	-	-	-
அகற்றல்	-	-	-	-	-	-	-	-	-	-	(15,007,442.85)	-	-	-	-	-	-	-
முடிவுறுத்தல் மீதி	5,272,129.09	4,884,257.49	3,148,928.80	3,156,548.80	14,579.00	14,579.00	1,862,900.00	5,698,339.72	1,189,566.61	1,189,566.61	25,551,754.68	15,007,442.85	118,524.54	118,524.54	1,145,102.30	1,103,102.30	6,531,265.68	6,531,265.68
சேர்க்கப்பட்ட தேய்மானம் (வருட ஆரம்பத்தில்)	2,674,484.70	2,181,197.54	2,611,250.82	2,293,155.10	14,579.00	14,579.00	5,013,456.01	4,833,472.57	1,071,418.28	968,165.78	15,007,442.85	13,558,382.20	59,285.60	47,433.05	866,004.29	755,653.06	1,309,831.90	983,268.62
தேய்மானம் (நிதிச் செயலாற்றுகை கூற்றுக்கு அமைவாக)	497,223.59	493,287.16	317,391.22	318,095.70	-	14,579.00	198,559.99	179,983.44	103,252.50	103,252.50	1,843,867.85	1,449,060.65	11,852.45	11,852.45	111,350.41	110,351.23	326,563.28	326,563.28
கழி – சொத்து செலவிடப்பட்ட சேர்க்கப்பட்ட தேய்மானம்	-	-	-	-	-	-	-	-	-	-	(15,007,442.85)	-	-	-	-	-	-	-
முடிவுறுத்தல் மீதி	3,149,829.09	2,674,474.70	2,927,233.04	2,611,250.82	14,579.00	14,579.00	30,978.49	5,013,456.01	1,174,670.78	1,071,418.28	1,702,565.35	15,007,442.85	71,138.05	59,285.60	977,354.70	866,004.29	1,636,395.18	1,309,831.90
தேறிய கொண்டுசெல்லல் தொகை	2,122,300.00	2,209,772.79	221,695.76	545,297.98	-	-	1,831,921.51	684,883.71	14,895.83	118,148.33	23,849,189.33	-	47,386.49	59,238.94	167,747.60	237,098.01	4,894,870.50	5,221,433.78

	குறிப்பு	2022		2021		மதிப்பீடுசெய்யப்பட்டது
கொடுப்பனவுகள்	**7**					
முத்திரைத் தீரவை		1,525.00		-		-
திரட்டப்பட்ட செலவுகள்		1,086,575.99		510,079.51		-
		1,088,100.99		**510,079.51**		**1,000,000.00**
குறுகிய கால ஏற்பாடுகள்	**8**					
கணக்காய்வுக் கட்டணம் – 2014		-		81,580.00		-
கணக்காய்வுக் கட்டணம் – 2020		-		-		-
ஐயக்கடன் ஏற்பாடு – நிமல் போபகே		40,062.82		40,062.82		40,062.82
		40,062.82		**396,642.82**		**40,062.82**
பணிக்கொடை ஏற்பாடு	09	4,181,542.50		3,870,402.50		4,200,000.00
அரச மானியம் - மீண்டுவரும்	10	22,880,000.00		22,191,000.00		23,591,550.00
அரச மானியம் - மூலதனம்	11					
அரச மானியம் - அபிவிருத்தி நடவடிக்கைகள்		1,781,906.72		683,152.12		-
மானிய வேறுபாடு		1,256,093.28		566,847.88		-
		3,038,000.00		**1,250,000.00**		**5,000,000.00**
வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மீதான இலாபம் (நட்டம்)	12					-
வருமானம்		-		-		-
செலவுகள்		72,400.00		(78,400.00)		-
		72,400.00		**(78,400.00)**		-

	குறிப்பு	2022		2021		மதிப்பீடுசெய்யப்பட்டது
ஏனைய வருமானம்	13	-		-		-
நானாவித வருமானம்		166,666.25		16,963.89		-
இடர் கடன் வட்டி		145,467.49		128,273.77		-
செலவுகளின் மிகை ஏற்பாடு		-		53,527.78		-
		312,133.74		**198,765.44**		
ஊதியம், சம்பளம் மற்றும் ஊழியர் நன்மைகள்	**14**					
கூலி மற்றும் சம்பளம்		10,788,502.55		10,832,244.32		10,875,160.00
வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு		1,887,600.00		2,020,200.00		1,890,000.00
தொலைபேசிக் கொடுப்பனவு		147,214.28		140,133.33		148,000.00
போக்குவரத்துக் கொடுப்பனவு		-		200,000.00		-
எரிபொருள் கொடுப்பனவு		418,372.33		66,650.00		419,000.00
ஊ.சே.நி		1,469,952.05		1,559,496.18		1,470,090.00
ஊ.ந.நி		367,470.66		389,891.36		367,530.00
மேலதிக நேரக் கொடுப்பனவு		256,012.06		173,875.15		276,950.00
கொடுப்பனவு சீராக்கம்		1,210,000.00		-		1,210,000.00
தொழில்சார் கொடுப்பனவு		324,000.00		322,000.00		324,000.00
பணிக்கொடைச் செலவுகள்		485,380.00		573,990.00		174,240.00
		17,354,503.93		**16,278,480.34**		**17,154,970.00**

	குறிப்பு	2022		2021		மதிப்பீடுசெய்யப்பட்டது
மானியங்கள் மற்றும் ஏனைய மாற்றல் கொடுப்பனவுகள்	**15**					
NHRDC ஊழியர்களைப் பலப்படுத்தல்		360,464.76		204,671.76		500,000.00
திண்மக் கழிவு முகாமைத்துவம்		-		3,240.00		-
COVID-19		-		4,800.00		-
வெளியீடுகள்		-		3,405.00		600,000.00
அபிவிருத்தி அலுவலர் கற்கை		216,410.00		136,028.03		590,000.00
தொழில்நுட்ப அலுவலர் கற்கை		-		88,331.25		-
மனிதவள அபிவிருத்திக் கொள்கை		133,084.40		217,676.08		750,000.00
உயிரியல் மருத்துவம்		-		25,000.00		-
தொழில் சந்தை		2,170.00		-		-
ரக்கியா அருண		976,994.06		-		1,500,000.00
ஏனைய கருத்திட்டங்கள்		30,180.00		-		300,000.00
மனதிவள அபிவிருத்திச் சுட்டெண்		62,603.50		-		100,000.00
		1,781,906.72		**683,152.12**		**4,340,000.00**
வழங்கல்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட நுகர்வுகள	16					
எழுது கருவிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள		(879,114.87)		(92,877.40)		-
எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி		608,299.05		270,116.64		202,700.00
		(270,815.82)		**177,239.24**		**202,700.00**
தேய்மானம் மற்றும் கடன் தீர்ப்புச் செலவுகள்	6			**2,992,446.41**		**3,000,000.00**
பயணச் செலவு, பிழைப்பூதியம் மற்றும் கொடுப்பனவு	17					
உள்நாட்டு பயணச் செலவு மற்றும் பிழைப்பூதியம்		73,210.21		54,640.00		62,410.00
கணக்காய்வு அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு		32,000.00		60,000.00		49,980.00
சபை அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு		253,800.00		104,000.00		254,000.00
		359,010.21		**218,640.00**		**366,390.00**

	குறிப்பு	2022		2021		மதிப்பீடுசெய்யப்பட்டது
பயன் மற்றும் சேவைகள்	18					
சோலைவரி		50,400.00		50,400.00		50,400.00
மின்சாரம்		594,902.04		473,580.55		571,980.00
தண்ணீர்		19,965.13		15,246.85		20,000.00
தொலைபேசிக் கட்டணம் மற்றும் வாடகை		141,005.30		149,227.68		140,000.00
தபால் மற்றும் டெலெக்ஸ் கட்டணம்		9,380.00		2,605.00		10,000.00
சுத்திகரிப்புச் சேவை		420,048.44		530,679.60		389,720.00
பாதுகாப்பு சேவை		1,474,117.22		1,123,618.36		1,308,670.00
இணையம்		150,492.34		107,231.94		92,870.00
ஏனைய பயனபடுத்தல் மற்றும் ஏனைய சேவைகள		709,031.40		585,815.45		1,391,220.00
		3,569,341.87		**3,038,405.43**		**3,974,860.00**
பராமரிப்பு செலவுகள்	19					
வாகனங்களின் பராமரிப்பு மற்றும் திருத்தங்கள்		466,718.99		311,535.80		347,760.00
வாகனக் காப்புறுதி		366,823.15		532,725.04		300,000.00
அலுவலக உபகரணங்களின் திருத்தம் மற்றும் பராமரிப்பு		188,360.00		150,466.44		188,360.00
கணணிகளின் திருத்தம் மற்றும் பராமரிப்பு திருத்தம் மற்றும் பராமரிப்பு		-		19,000.00		-
ஏனைய சொத்துகளின் திருத்தம் மற்றும் பராமரிப்பு		630,618.32		46,685.00		552,840.00
		1,652,520.46		**1,060,412.28**		**1,388,960.00**
ஏனைய செலவுகள்	20					
கணக்காய்வுக் கட்டணம்		363,620.00		302,000.00		-
புத்துணர்ச்சி உணவுகள்		72,495.25		38,620.80		64,300.00
மருத்துவச் செலவுகள்		-		-		-
ஏனைய செலவுகள்		-		3,590.00		-
சொத்துப் பதிவழிப்பு		569,973.01		-		
		1,006,088.26		**344,210.80**		**64,300.00**

12. குறிப்புகள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம், விளக்கக் குறிப்புகள்

1. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை 1997ம் ஆண்டு 18ம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் நிறுவனத்திற்கு மனித வள அபிவிருத்திக்கு அவசியமான அனைத்து மனித வள அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகளை அமுல்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் சாட்டப்பட்டுள்ளது.

2. **கணக்குகளை விளக்கல் மற்றும் நிதியில் கூற்றுகளை வழங்குவதற்கான அதிகாரம்**
1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14ம் பிரிவுக்கு அமைவாக, இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை பொதுக் கூட்டுத்தாபனமாக இருப்பதனால், நிறுவனத்தின் நிதியாண்டு முடிவடைந்தவுடன் உடனடியாக, நிறுவனத்தின் அதிகாரத்திற்காக அவ்வருடத்தில் அதன் கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான வருடாந்த அறிக்கையின் முன்வரைபினை தயாரித்தல் வேண்டும். இந்த அறிக்கை, அக்காலப்பகுதியில் உரிய அமைச்சரினால் வழங்கப்பட்ட யாதேனும் வழிகாட்டல்களைக் கொண்டிருக்கும். இந்த அறிக்கைகளின் பிரதிகளை, வருடம் முடிவடைந்த நான்கு மாதங்களின் பின்னர், உரிய அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் (அவர் உரிய அமைச்சராக இல்லாத பட்சத்தில்), திட்டமிடல் அமைச்சர் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குதல் வேண்டும்.

   1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14ம் பிரிவுக்கு அமைவாக, ஒவ்வொரு நிதியாண்டும், கணக்காய்வாளர் நாயகம் யாதேனும் குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்குமாறு கோரப்படின் அவ்வடிவத்தில், ஒவ்வொரு நிதியாண்டும் நிதியாண்டு முடிவடைந்து நான்கு மாதங்களின் பின்னர் நிறுவனத்தின் கணக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு நிறுவனமும் இந்த உப பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைவாக அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு தவறின் இச்சட்டத்தின் கீழ் குற்றமிழைத்ததாகக் கருதப்படுவதுடன், மஜிஸ்ரேட்டின் முன்னர் நம்பிக்கைகைய இழந்தால், ரூபா ஆயிரத்திற்கு குறைவில்லாத தண்டப்பணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

3. **இணக்கக் கூற்று**
இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் கணக்கீட்டு முறை, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை அரச சேவை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக தயாரிக்கப்படுகின்றது.

4. **அளவீட்டு அடிப்படை**

   சபையின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரய அடிப்படையில், 2008, 2011, 2014 மற்றும் 2016ம் ஆண்டில் இலங்கை மதிப்பீட்டுத் திணைக்களத்தினாலும் சுயாதீன

மதிப்பீட்டாளர்களினாலும் குறிப்பிட்ட தளபாடம் மற்றும் பொருத்திகள், அலுவலக உபகரணங்கள், மினசார பொருத்திகள் மற்றும் உபகரணங்கள், கணணிகள், வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பீடுகள் தவிர்த்து தயாரிக்கப்படுகின்றது.

5. சொத்துத்து மதிப்பீட்டுக்கான அடிப்படை

5.1 சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவை குறைந்து செல்லும் தேய்மானத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பிடப்படுகின்றது.

5.2 சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்கு தேய்மானம் அறவிடப்பட்டு மதிப்பிடப்பட்ட பயன்படுத்தல் காலத்தின் பின்னர் பதிவழிப்பு மேற்கொள்ளப்பட்டது.

5.3 2009ம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டவைகளுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டுக்கு தேய்மானம் வழங்கப்படுவதில்லை மற்றும் அவை அககற்றப்படும் பொழுது முழு ஆண்டுக்கான தேய்மானம் வழங்கப்பட்டது மற்றும் 2009ம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட திகதியின் அடிப்படையில் தேய்மானம் கணிக்கப்படுகின்றது.

நுகர்வுக் களஞ்சியம் குறைந்த ஆகுசெலவு மற்றும் தேறிய சாத்தியமான பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றது.

6. தேய்மானம்

6.1 சொத்துக்களின் வகை மற்றும் தேய்மான வீதங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்துக்களின் தன்மை மற்றும் அவற்றின் பயன்பாட்டின் அடிப்படையில் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டள்ளது.

கட்டடம் மற்றும் கட்டமைப்பு	5%
தளபாடம் மற்றும் பொருத்திகள்	10%
அலுவலக உபகரணங்கள்	10%
மின்சாரப் பொருத்திகள் மற்றும் உபகரணங்கள்	20%
கணணிகள்	20%
கணணி மென்பொருள்	25%
வாகனங்கள்	20%
புத்தகங்கள்	10%
ஏனைய சொத்துக்கள்	10%

7. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரான நிகழ்வுகள்

அனைத்து பொருளாக்கப்பட்ட ஐந்தொகை நிகழ்வுகளும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது மற்றும் அவசிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது அல்லது நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கட்டடத்தின் சீரமைப்பு பணிகள் 2017 ஜனவரியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டள்ளதுடன் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பச் செலவுகள் அனைத்தும் நடைமுறைச் செலவுகளின் கீழ் குறைவேலையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

8. சொத்து பரிமாற்றம்

தளபாடம் மற்றும் பொருத்திகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் போன்ற சொத்துக்கள் புதுப்பித்தலுக்காக அகற்றப்பட்டுள்ளது. இந்த சொத்துக்கள் வாழ்க்கைத் தொழில் பயிற்சி அதிகாரசபையின் பயிற்சி மத்தியநிலையங்களுக்கு பயன்படுத்துவதற்காக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த சொத்து மாற்றத்திற்கான உரிய அனுமதி அமைச்சிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

9. அரச மானியத்திற்கான கணக்கீடு

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபைக்கு பொதுத் திறைசேரியினால் அரசின் மூலதன மற்றும் மீண்டுவரும் மானியங்களாக கிடைக்கப் பெற்றவையின் மூலம் நிறுவனத்தின் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்ட தொகை மற்றும் இவ்வருடம் தேய்மானமாக அறிவிடப்பட்ட தொகை என்பவை மூலதனச் சொத்துக்களின் பயன்பாட்டுக்கால முறையியல் அடிப்படை மீதான வருமானமாக அடையாளம் காணப்பட்டது.

10. ஓய்வூதிய நன்மைச் செலவு

10.1 பங்களிப்பு திட்டத்தை வரையறுத்தல் – ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கு தகைமை பெற்ற அனைத்து ஊழியர்களுக்குமான பங்களிப்பு உரிய பங்களிப்பு நிதியத்தின் ஊடாக உரிய விதிமுறைகளின் அமைவாக அணவல் செய்யப்பட்டது. அனைத்து பங்களிப்புகளும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு அமைவாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

10.2 ஓய்வூதியக் பணிக்கொடை

1983ம் ஆண்டு 12ம் இலக்க ஓய்வூதிய கொடுப்பனவுச்ச் சட்டத்தின் கீழ் வரும் அனைத்து ஊழியர்களுக்குமான கொடுப்பனவுகள், இலங்கை கணக்கியல் நியம இலக்கம் 19இல் குறிப்பிடப்பட்ட 'ஊழியர் நன்மைகள்' என்பதற்கு அமைவாக நிதிக்கூற்றில் ஓய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. பணிக்கொடை பொறுப்பானது வெளிவாரியாக நிதியிடப்படவில்லை அல்லது அட்டுறுவாக பெறுமதியிடப்படவில்லை.

11. நிதிச் செயற்பாடுகள்

சபை அதன் மூலதனச் சொத்துக்களின் தொழிற்பாடு மற்றும் பராமரித்தல் என்பவற்றின் போது வினைத்திறமையுடன் செயற்பட்டதுடன் வருமானத்தை அறவிட்டது. வருமானச் செலவுகளின் மிகை அல்லது பற்றாக்குறை, அனைத்து பொறுப்புகள் மற்றும் சொத்துக்களின் தேய்மானம் என்வற்றின் ஏற்பாடுகளின் பின்னர் ஏற்பட்டதாகும்.

12. காசுப் பாச்சல் கூற்று

இலங்கை அரசதுறை கணக்கியல் நியமம் 2 இன் 27ம் பிரிவில் விபரிக்கப்பட்டதற்கு அமைவாக மறைமுக முறை பயன்படுத்தப்பட்டு காசுப் பாச்சல்கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

13. அமைச்சினால் சாட்டப்பட்ட வாகனங்கள்

01.02.2016ம் திகதியில் இருந்து தற்காலிக அடிப்படையில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சினால், இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபைக்கு WP- PD 6170 எனும் வாகன இலக்கம் மற்றும் JNICJUD22Z0116541 செஸி இலக்கமுடைய வாகனம் சாட்டப்பட்டுள்ளது.

13.கணக்காய்வு அறிக்கை

VOT/D/NHRDC/1/2022/29 2023 செப்தெம்பர் 14

தலைவர்
மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் இலங்கை தேசிய சபை

மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் இலங்கை தேசிய சபையின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் இலங்கை தேசிய சபையின் (''சபை'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை

பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 21(உ) இன் பிரகாரம் நிறுவனமொன்று அங்கீகரிக்க பாதீடொன்று வழங்கப்பட்டிருக்குமாயின் மேலதிக நிதிக்கூற்றாக பாதீடு செய்யப்பட்ட தொகைக்கும் உள்ளபடியான தொகைக்கும் இடையே ஒப்பீடொன்று அல்லது நிதிக் கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தொகைகள் தனியான நிரலில் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடொன்று இல்லாதிருந்த ரூபா 29,268,683 பெறுமதியுடைய 08 விடயங்கள் பாதீடு செய்யப்பட்ட தகவல்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றுவழி கணக்கு வைத்தல் முறைமையின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஆண்டில் கிடைத்த சகல மூலதன மானியங்களும் மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் உருவான வருமானத்தின் கீழ் காண்பிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அரசாங்கத்தின் மூலதன மானியமாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 3,038,000 தொகையில் ரூபா 1,256,094 வருமானமாக இனங்காணப்படாமையின் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் அரசாங்கத்தின் மூலதன மானியம் ரூபா 1,256,094 இனால் முறையே குறைத்தும், அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் மோட்டார் வாகனங்களுக்காக இனங்காணப்பட வேண்டிய பெறுமானத் தேய்வு செலவினம் ரூபா 2,052,637 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் பெறுமானத் தேய்வாக ரூபா 1,843,867 காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை மற்றும் மோட்டார் வாகனக் கணக்கின் மீதி ரூபா 208,770 இனால் முறையே குறைத்தும், அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கணனி துணைப்பாகங்களுக்காக மீளாய்வாண்டின் ஆரம்பம் முதல் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட திகதி வரை இனங்காண வேண்டிய பெறுமானத் தேய்வு செலவினம் ரூபா 98,019 ஆக இருந்த போதும் அதை நிதிக் கூற்றுக்களில் ரூபா 167,581 ஆக இனங்காணப்பட்டதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை மற்றும் மீள்மதிப்பீட்டு மிகை ரூபா 69,562 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்வதற்கு முன் கணனி உபகரணங்கள் கணக்கின் மீதி ரூபா 5,698,339 ஆக இருந்த போதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட

சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு பட்டோலையின் பிரகாரம் அந்த சொத்துக்களின் கிரயம் ரூபா 5,380,568 ஆனமையால் ரூபா 317,771 வேறுபாடு காணப்பட்டது.

(ஊ) காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல் கணிப்பிடும் போது நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்படாத ரூபா 541,933 செலவினம் மிகை ஒதுக்கீடாக ஆண்டின் மிகையில் சீரரக்கப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சல் அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்காக இருப்புக் கணக்கின் ஆரம்ப மீதியான ரூபா 1,080,696 தொகை, காகிதாதிகள் செலவினக் கணக்கில் தாமத வழுக்களினால் ரூபா 180,696 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை மற்றும் இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 900,000 இனால் முறையே குறைத்தும், அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட மிகைக் கணக்கிலும், பிற்போட்ட அரசாங்க மூலதன மானியக் கணக்கிலும் மீதி முறையே ரூபா 267,254 மற்றும் ரூபா 9,297,497 ஆக இருந்த போதும் 2022 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியாக திரண்ட மிகைக் கணக்கில் ரூபா 508,294 வரவிலும், பிற்போட்ட அரசாங்கத்தின் மூலதன மானியக் கணக்கில் ரூபா 10,073,045 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அப்பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவற்கு கணக்காய்வின் போது முடியாதிருந்தது.

(ஐ) 2022 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் பெறுமானத் தேய்வு செலவினம் ரூபா 831,123 நிதிக் கூற்றுக்களில் பெறுமானத் தேய்வு செலவினமாக இனங்காணப்பட்டிருக்கும் போது வழுக்களுடன் மீண்டும் அப்பெறுமதி ஆண்டின் வருமானத்திலும், பிற்போட்ட வருமானக் கணக்கிலும் பதியப்பட்டதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை மற்றும் பிற்போட்ட வருமான மானியம் என்பன அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) கடந்த ஆண்டுகளின் போது பொருள் மெய்மையாய்வுகளில் இனங்காணப்பட்ட அகற்றப்பட்ட கிரயம் ரூபா 569,973 ஆன கணனி துணைப்பாகங்கள் மீளாய்வாண்டில் ஏடுகளிலிருந்து பதிவழிக்கும் போது சொத்துக்களின் திரண்ட பெறுமானத் தேய்வு சொத்துக்கள் பதிவழிக்கும் கணக்கிற்கு மாற்றப்படாமல் சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு கணக்கிற்கு மாற்றப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கின் மீதி என்பன அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின்

பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 சபையின் 2022 இன் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் எனக்கு கிடைக்கப் பெற்று சபையின் 2022 இன் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள போதும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என கருதப்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தும் முடிவுரையினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

சபையின் ஆண்டறிக்கையை நான் வாசிக்கையில் அதில் பொருண்மையான பிழையாகக் காட்டுதல் உள்ளது என முடிவுக்கு வந்தால் சரிசெய்வதற்காக நிருவகிக்கின்ற தரப்பினருக்கு இவ்விடயங்களைத் நான் தெரியப்படுத்துதல் வேண்டும். இன்னும் சரிசெய்யப்படாத பொருண்மையான பிழையாகக் காட்டுதல்கள் இருக்குமாயிருந்தால் அவற்றை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தும் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபை தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சபையின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் மன்றத்தின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை சபை பேணி வந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும் வேறு, எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் நிர்வாக சபையின்

ஏதேனுமொரு அங்கத்தவருக்கு சபை சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் உள்ளது என.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது சபையின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதிருந்தது என.

சட்டங்கள், விதிகள்/ ஏற்பாடுகளுடனான தொடர்பு	அவதானிப்புக்கள்
(அ) 2023 சனவரி 27 ஆம் திகதியில் 01/2023 ஆம் இலக்க தேசிய வரவுத்திட்ட சுற்றறிக்கையின் 02(viii) ஆம் பந்தியின் மூலம் திருத்தப்பட்ட 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் 3(x) ஆம் பந்தி	அரசாங்கத்தின் முற்பணக் கணக்கின் கீழ் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன் வசதிகள் கைவிடப்பட்டிருந்த போதும் அதற்கு இணங்காத வகையில் சபையில் சேவையாற்றுகின்ற 03 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு இடர் கடனாக ரூபா 403,000 தொகையும், 07 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு விழா முற்பணமாக ரூபா 70,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.
(ஆ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பொது முயற்சிகளுக்குரிய செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பந்தி	கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் 2022 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 132 நாட்கள் தாமதத்தின் பின்னர் அதாவது 2023 யூன் 12 ஆம் திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் செயற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.

அதிகாரங்கள், இலக்குகள், பணிகள்	அவதானிப்புக்கள்
(அ) 1997 இன் 18 ஆம் இலக்க மனிதவள அபிவிருத்தி சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய மனிதவள அபிவிருத்தி கொள்கை ஒன்றைத் தயாரித்தல் மற்றும் அதனை காலரீதியில் மீளாய்வு செய்தல், மனிதவள அபிவிருத்தி தொடர்பான அமைச்சருக்கும் அரசாங்கத்திற்கும் ஆலோசனை வழங்குதல்	நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டு 25 வருடங்கள் கடந்திருந்த போதும் தேசிய சபை உருவாக்கப்பட்டதன் இந்த அடிப்படை நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தவறியிருந்தது.
(ஆ) மேற்கூறப்பட்ட சட்டத்தின் 16(2) இ மற்றும் 16(2)ஊ பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் பணிகளை நிறைவேற்றுதல்.	
(i) சபையினால் நிறைவேற்றப்படுகின்ற இலக்குகளுக்கு சமனான இலக்குகளை நிறைவேற்றுகின்ற இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள சர்வதேச முகவராண்மை நிறுவனம் மற்றும் ஏனைய அமைப்புக்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.	2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்தப் பணிகள் நிறைவேற்றப்பாதிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கை திட்டத்தை பரீட்சித்த போது இதற்காக தேவையான செயற்பாடுகளேனும் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.
(ii) நிறுவனத்தின் அடிப்படை நோக்கம் நிறைவேற்றிக் கொள்வதற்கு உதவியாக மனிதவள அபிவிருத்திக்குரிய பல்வேறு துறைகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய தரவு வங்கி ஒன்றை பேணிச் செல்லல்.	2021 ஆம் ஆண்டின் போது தரவு வங்கியை வடிவமைப்பதற்காக ஆலோசனையாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்ட போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தரவு வங்கி ஒன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக கால எல்லைக்குள் உரிய சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2016 ஆம் ஆண்டு முதல் சபையினால் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியதால் உருவான ரூபா 14,329,816 மிகை ஆக்கபூர்வமாக முதலீடு செய்யப்படாமல் 2022 சனவரி 01 இல் உள்ளவாறு சபையின் பேரில் அரசாங்க வங்கியொன்றின் நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்டமையால் 2022 ஆம் ஆண்டின் போது மாத்திரம் ஆகக் குறைந்தது ரூபா 788,140 வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 பெப்ரவரி மாதம் முதல் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சிற்குச் சொந்தமான மதிப்பீட்டு பெறுமதி ரூபா 9,100,000 ஆன கெப் வண்டி 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய PFB/08/2019 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் சகல பொது முயற்சிகளினதும் 2020 சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் தேசிய e-GP முறைமைக்காக பதிவுசெய்ய வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் தேசிய சபையினால் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி